# இல்முல் ஙைபிப் - மாநபியின் மறைவான ஞானம்

# Knowledge of Unseen

*உர்துவில்:* அல்லாமா அஹ்மது யார் கான் நயீமி பதாயூனி ரஹிமஹுல்லாஹு

*Urdu* – Allama Ahamed Yaar Khan Naeemi, Badayuni Rahimahullah

*தமிழில்:* மௌலவி அல்ஹாபிழ் அப்துர் ரஸ்ஸாக் கௌஸி ஸூஃபி, தஞ்சை.

*Tamil* – Moulvi AlHafiz Abdur Razzak Gowsi Sufi, Tanjavoor.

**முன்னுரை**

பொதுவாக நாயகத்தின் **'இல்முல் ஙைப்'** எனப்படும் மறைவான ஞானங்களைப் பற்றி வழிகெட்ட வஹ்ஹாபி பிரிவினை வாதிகள் முன்னுக்குப் பின் முரணாக பேசியும், எழுதியும் மக்களை குழப்பத்திலாத்தி வருகின்றனர்.

எனவே மறுக்க முடியாத நபிமார்களின் குறிப்பாக பெருமானாரின் அற்புதங்களில் - அவசியங்களில் ஒன்றான 'இல்முல் ஙைப்' பற்றி தெளிவான வழிகாட்டுதல் தேவைப்படுகிறது.

அவசியம் கருதி அஹ்லுஸ்ஸுன்னத் வல் ஜமாஅத்தின் மிகப் பெரிய முப்தி, மேதை அல்லாமா அஹ்மத் யார் கான் நயீமி பதாயூனி அவர்களின் 'ஜாஅல்ஹக்'; உர்து நூலிலிருந்து 'இல்முல் ஙைப்' எனும் பகுதியை மொழி பெயர்க்கிறோம். அல்லாஹ் கபூல் செய்வானாக. நேர்வழி காட்டுவானாக. ஆமீன்.

*- மௌலவி அல்ஹாபிழ் அப்துர் ரஸ்ஸாக்*

**இல்முல் ஙைப்**

இல்முல் ஙைப் எனில் பார்த்தோ, கேட்டோ அல்லது எந்த ஒரு தொடு உணர்வின் மூலமோ அவ்வாறே எவ்வித ஆதாரமுமின்றி அறிவு விளங்கியோ பெற முடியாத மறைவான ஞானமாகும்.

**இல்முல் ஙைப் இரண்டு வகை.**

1. ஆதார அடிப்படையில் அறிய முடிந்தது (உதாரணமாக: அல்லாஹ், மறுமை, சுவனம், நரகம் போன்ற குர்ஆன் ஹதீது ஆதாரத்தில் அறிய முடிந்தவை)

2. ஆதாரத்தை வைத்தும் அறிய முடியாதவை. (உதாரணம்: கியாமநாள் எப்போது? நாளை என்ன நடக்கும்? எங்கு எப்போது எவ்வளவு மழை பெய்யும்? ஒருவரின் இறுதி முடிவு என்னவாகும்? போன்றவைகளை கணிக்கலாமே தவிர எவ்வித ஆதாரத்தையும் வைத்தும் அறிய முடியாது.

இந்த இரண்டாம் வகைக்கு திருமறை மஃபாதிஹுல் கைப் என பெயர் சூட்டியது. இதனைப் பற்றி அல்குர்ஆன் சூறத்துல் ஜின்னில்:

فلا يظهر على غيبه احد ا الا من ارتضى من رسول

அல்லாஹ் ரஸூலில் நின்றும் தான் நாடியவர்களுக்கே தவிர வேறொருவருக்கும் தன் மறைவான விஷயங்களை வெளிப்படுத்த மாட்டான் என்று கூறுகிறது.

நாம் இல்முல் கைப் என்பதற்கு மேற்கூறிய பொருளையே தப்ஸீர் ரூஹுல் பயான் விளக்குகிறது. தப்சீர் கபீரில் பொதுவாக எல்லா திருமறை விரிவுரையாளர்களின் விளக்கம் என்று அதையே குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் நவீன காலத்தில் கருவிகள் மூலம் (உதாரணம்: கர்ப்பத்திலுள்ள குழந்தை) கண்டறியப்படுவது இல்முல் கைபின் மஃபாதிஹுல் கைபில் சேராது. ஏனெனில் இவை கருவிகளின் மூலம் அறியப்படுகிறது.

அது இயற்கை வழிமுறைகளுக்கு அப்பாற்பட்டு இருப்பது அவசியம். உதாரணமாக பெருமானார் எங்கெங்கோ நடந்ததை, நடப்பதை, நடக்கப் போவதையெல்லாம் கூறியது. உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பல மைல்களுக்கு அப்பால் இருந்த சாரிய்யா ரலியல்லாஹு அன்ஹுவைப் பார்த்தது. இவையெல்லாம் இயற்கை வழிமுறையிலோ, செயற்கை சாதனங்கள், கருவிகளைக் கொண்டோ அறியப்பட்டவைகள் அல்ல.

**அகீதா-கொள்கை**

1.அல்லாஹ் ஒருவன் மட்டுமே ஆலிமும் பித்தாத் -அனைத்தையும் சுயமாக அறியக் கூடியவன். அவன் கொடுக்காமல் யாருக்கும் எந்த இல்மும் அறிவும் கிடைக்காது.

2.அல்லாஹ் தன் நபிமார்களுக்கு சில இல்முல் கைப் எனப்படும் மறைவான ஞானங்களை வழங்குகிறான்.

3.குறிப்பாக நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு எல்லா படைப்புகளையும் விட அதிக இல்ம்-ஞானம் வழங்கப்பட்டிருக்கிறது. (நபிமார்கள், ஜின்கள், ஷைத்தான்கள், அனைவர்களும் அல்லாஹ்வைத் தவிர படைப்புக்கள்தான்.) இம்மூன்று விஷயங்களில் எதை மறுத்தாலும் அது குப்ர் என்னும் இறை மறுப்பாகும்.

4.அவ்லியாக்களுக்கும் நபிமார்களின் மூலம் சில இல்முல்கைப் கிடைக்கிறது.

5.அல்லாஹ் பெருமானாருக்கு மபாதிஹுல் கைப்எனப்படும் ஐந்து விசயங்கள் உட்பட இன்னும் பல மறைவான விஷயங்களை அளித்துள்ளான்.

(இவ்விரண்டையும் மறுப்பது வழிகேடாகும். சில ஹதீதுகளை மறுப்பதாகும்)

6.கியாம நாள் என்று நிகழும் என்பதை நாயகம் அறிவிக்கின்றனர்.

7.முக்காலத்து செய்திகளையும் -லவ்ஹுல் மஹ்பூலிலுள்ள எல்லாவற்றையும், அதற்கும் மேல்.... நாயகம் அறிவர்.

8.ரூஹின் இரகசியங்களையும், குர்ஆனிலுள்ள முதஷாபிஹாத் வசனங்களின் விளக்கத்தையும் அறிவார்கள்.

**மறுப்போரின் கவனத்திற்கு**

பொதுவாக இல்முல் கைபை மறுப்போர் நான்கு விசயத்தையும் அவசியம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

1.ஆயத்தாக இருந்தால் சுற்றி வளைத்து ஆதாரம் பிடிக்காமல் நேரடியானதாகவும், ஹதீது எனில் முதவாதிரான அல்லது சஹீஹ் ஹதீதுகளை முன் வைக்க வேண்டும்.

2.அந்த ஆயத்தில் பெருமானாருக்கு இல்முல் கைப் வழங்கப்படவில்லை என்றும், ஹதீது எனில் எனக்கு அதைப் பற்றிய இல்ம் - ஞானம் வழங்கப்படவில்லை என்று நாயகம் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

3.ஒன்றை வெளிப்படுத்தாதிருப்பது அந்த இல்ம் இல்லை என்பதன் ஆதாரமாகாது. மக்களின் நன்மை கருதியும் அதை வெளிப்படுத்தாமல் இருந்திருக்கலாம்.

அவ்வாறே அல்லாஹ்வே அறியக் கூடியவன். அல்லாஹ்வையன்றி யாரும் அறிவாரில்லை. எனக்கு என்னத் தெரியும்? என்ற வாசகங்களும் இல்ம் இல்லை என்பதற்கு ஆதாரமாகாது. ஏனெனில் கேட்பவரின் நன்மை கருதி அவருக்கு பதிலளிக்கக் கூடாது என்பதற்காக இப்படிப்பட்ட பொதுவான வாசகங்கள் உபயோகிக்கப்படலாம்.

4.நிகழ்வாயினும், கியாமநாள் வரை நடக்கக் கூடிய எதுவாயினும் எதனைப் பற்றிய இல்ம் இல்லை என வாதம் முன் வைக்கப்படுகிறதோ அதனைப் பற்றிய தெளிவான ஆதாரம் சமர்ப்பிக்கப் பட வேண்டும்.

மாறாக பொதுவாக எந்த இல்மும் இல்லை என்று மழுப்பலான வாதம் முன்வைக்கப் படக் கூடாது. ஏனெனில் பொதுவாக நாயகத்திறகு அனைத்து இல்முகளையும் வழங்கப்பட்டுள்ளது என்பது எங்களின் கொள்கையுமல்ல. மாறாக எல்லா படைப்புகளையும் விட அதிகமான இல்ம், இல்முல் கைப் - மறைவான ஞானம் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்று தான் நாங்கள் கூறுகிறோமே தவிர இறைவன் அறியும் அனைத்தையும் நம் பெருமானார் அறியக் கூடியவர்கள் என்று நாங்கள் கூறவில்லை.

முதலில் இல்முல் கைப் நபிமார்களுக்கு வழங்கப்படுகிறது என்பதற்கான குர்ஆன் ஆதாரம்:

அல்லாஹ் கூறுகிறான்:

وَعَلَّمَ آدَمَ الْأَسْمَاءَ كُلَّهَا ثُمَّ عَرَضَهُمْ عَلَى الْمَلَائِكَةِ

அல்லாஹ் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமுக்கு எல்லாவற்றின் பெயர்களையும் கற்பித்தான். பின்பு அவற்றை மலக்குகளுக்கு முன்னால் எடுத்துக் காட்டினான் எனும் வசனத்திற்கு மதாரிக், காஜின், கபீர், அபுஸ்ஸுஊத், ரூஹுல் பயான் என பரவலாக எல்லா தப்சீர்களிலும் 'அல்லாஹ் தான் படைத்த எல்லா படைப்புகளின் -கியாமநாள் வரை பேசப்படும் மொழிகள், பிச்சளங்களின் பெயர்கள், கியாமத் நாள் வரை உருவாகக் கூடிய கருவிகளின் பெயர்கள், தீன் துன்யாவுடைய விசயங்கள் என அனைத்துச் செய்திகளையும் கற்பித்தான்' என விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

ஷைக் இப்னு அரபி புதூஹாத்தே மக்கிய்யா எனும் நூலில்:-

اوَل نَائب كان له صلى الله عليه وسلم وخليفة ادم عليه السلام

பெருமானாரின் முதல் நாயிபும்;, முதல் கலீபாவும் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்தான் எனக் குறிப்பிடுகிறார்கள்.

நாயிப், கலீபா எனில் அசலாக உள்ளவர்களின் இடத்திலிருந்து செயல்படக் கூடியவர்கள் என்பது பொருள்.

நாயகம் பிறக்கும் முன் எல்லா நபிமார்களும் நாயகத்தின் நாயிபாக, பிரதிநிதியாக செயல்பட்டார்கள் என்பதை மௌலவி காசிம் நானுத்தோவியும் தமது தஹ்தீருன்னாஸில் எழுதியுள்ளார்கள்.

நாயகத்தின் நாயிபின் (ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின்) இல்ம் எவ்வளவு என்பதைப் பார்த்தீர்களா?

காழி இயாழ் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் நஸீமுர் ரியாழ் ஷரஹ் ஷபாவில், 'பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாமுக்கு காட்டப்பட்டது போலவே பெருமானாருக்கும் ஆதம் நபி முதல் கியாம நாள் வரை உள்ள அனைத்துப் படைப்புகளும் எடுத்துக் காட்டப்பட்டது' என்று வருகிறது.

ஆக நாயகம் அனைத்துப் படைப்புக்களையும் அறிகின்றனர். அந்த மறைவான ஞானம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அல்லாஹ் கூறுகிறான் وَيَكُوْنُ الرَّسُوْلُ عَلَيْكُمْ شَهِيْدًا ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உங்கள் சாட்சியாளர்.

இவ்வசனத்திற்கு தப்சீர் அஜீஸி, ரூஹுல் பயான், காஜின், மதாரிக் ஆகிய அநேக தப்சீர்களில்:- நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் தங்களது உம்மத்தினரின் தீன், உள்ளத்திலே உள்ள ஈமான், அதன் தரம் ஆகிய விசயங்களை அறிகின்றனர். நாளை கியாம நாளில் இறைவனது விசாரணையில் தங்களது உம்மத்தினரின் ஈமானுக்கு சாட்சி பகர்கின்றனர் என்று வந்துள்ளது. மேலும் இவ்வசனத்தின் விளக்கத்தில் மற்ற நபிமார்களின் உம்மத்துக்கள் அவர்களது நபிமார்களை மறுக்கும்போது அந்நபிமார்கள் தங்களுக்கு சாட்சியாக நாயகத்தின் உம்மத்தான நம்மை அழைப்பார்கள். அவர்களுக்கு ஆதரவாக நாம் சாட்சியமளிப்போம்

என்பதும் 'மக்களின் மீது சாட்சியாக ஆவதற்காகவும் உங்களை நடுநிலையான உம்மத்தாக ஆக்கினோம்' என்ற வசன வாசகத்தின் கீழ் தப்சீர் செய்யப்பட்டுள்ளது.

மேலும் நாம் சாட்சி கூறும் சமயம் நம்மிடம் இறைவன் வினவுவான் 'உங்களுக்கு முன் வாழ்ந்த சமுதாயத்தினரைப் பற்றி உங்களுக்கு எப்படித் தெரியும் என, அதற்கு:- யா அல்லாஹ்! உனது வசனங்கள் மூலமாகவும், உனது தூதர் பெருமானாரின் வாக்கிலும் எல்லா சமூகத்திற்கும் நபிமார்களும் அனுப்பப்பட்டார்கள் என்பதையும், அவர்கள் தங்களது தப்லீகை சரியாக நிறைவேற்றினார்கள் என்பதையும் அறிந்து கொண்டோம் என பதிலுரைப்போம் என்ற விளக்கமும் மேற்கண்ட வசனத்தின் கீழ் தரப்பட்டுள்ளது.

ஆகவே நாயகமவர்கள் கியாமநாள் வரையுள்ள முஸ்லிம்களின் ஈமான், அமல்கள், எண்ணங்கள் அனைத்தையும் அறிகிறார்கள். அறிந்தால் மட்டுமே இறைவனிடம் அவர்களுக்காக சாட்சியமளிக்க முடியும்.

மேலும் ஒவ்வொரு நபியும் தன் உம்மத்தின் நிலையை அறிகின்றனர் என்பதையும் குர்ஆன் வசனங்கள் மூலம் அறிய வருகிறோம்.

ஹஜ்ரத் நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்களது உம்மத்தின் நிலையை அறிந்ததால்தான் இப்படி துஆ செய்தார்கள். குர்ஆன் கூறுகிறது:-

وَقَالَ نُوْحٌ رَّبِّ لَا تَذْرْ عَلَى الْاَرْضِ مِنَ الْكَافِرِيْنَ دَيَّارًا . اِنَّكَ اِنْ تَذَرَهُمْ يُضِلُّوْا عِبَادَكَ وَلَا يَلِدُوْا اِلَّا فَاجِرًا كَفَّارًا .

நூஹ் (அலைஹிஸ்ஸலாம் அவர்கள் துஆ) கேட்டனர்: என் இறைவா! காபிர்களில் குடியிருக்கும் எவரையும் இப்பூமியில் விட்டு விடாதே!

நிச்சயமாக நீ அவர்களை விட்டு வைத்தால் உன்னுடைய அடியார்களை அவர்கள் வழி கெடுத்து விடுவார்கள். இன்னும் உன்னை நிராகரிக்கும் பாவிகளைத் தவிர வேறு (நல்லவர்) எவரையும் பெற்றெடுக்கவும் மாட்டார்கள்.

ஒரு சிறுவனின் எதிர்காலம் மிகத் தீயதாய் இருப்பதையும் அவன் மூலம் அவனது பெற்றோருக்கு பெரும் தீவினை ஏற்படுவதையும் அறிந்தே ஹழ்ரத் கிழ்ர் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைவனின் ஆணைப்படி அச்சிறுவனை கொன்றொழித்தார்கள் என்பதையும் குர்ஆன் பதிவு செய்கிறது.

மேலும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களின் நுபுவ்வத்தின் ஒளியில் தமக்கு முன் வந்த நபிமார்களின் உம்மத்துக்களின் நிலையையும் அறிந்து கொண்டுள்ளனர். எனவேதான் அவர்களுடைய சொல் நாளை உம்மத்தான நாம் முன் நபிகளின் உம்மத்திற்கெதிராக சாட்சியமளிப்பதற்கான தகுந்த சான்றாக உள்ளது. இல்லாவிட்டால் அவர்களது நிலையை அறியாத நாயகத்தின் சொல்லை இறைவன் நியாயமான தீர்ப்பு நாளில் சாட்சியாக்க முடியாது.

ஏனெனில் உண்மை நிலை அறியாத ஒருவரின் சொல்லை – அதை சாட்சிகளின் ஆதாரமாக - இறைவன் அங்கீகரிக்க மாட்டான். அல்லாஹ் நீதியாளன். மேலும் குர்ஆன் கூறுகிறது فَكَيْفَ اِذَا جِئْنَا مِنْ كُلِّ اُمَّةٍ بِشَهِيْدٍ وَجِئْنَا بِكَ عَلى هٰؤُلَاءِ شَهِيْدًا எனவே நபியே! ஒவ்வொரு உம்மத்திலிருந்தும் ஒரு சாட்சியை நாம் கொண்டு வந்து உம்மை இவர்களுக்கு சாட்சியாக நாம் கொண்டு வரும் போது (உம்மை நிராகரிப்பவர்களாகிய இவர்களின் நிலை) எவ்வாறிருக்கும்?

இதற்கு தப்சீர் நைஷாழரியில் 'நாயகத்தின் ரூஹ் எல்லா அர்வாஹ்கள் (உயிர்கள்) கல்புகள் (இதயங்கள்) நப்சுகள் (ஆத்மாக்கள்) மீதும் சாட்சியாகும். இதற்கு ஆதாரம் اَوّل ما خَلق الله من نورى அல்லாஹ்வின் படைப்புகளில் முதன்மையானது என் ஒளியே என்ற ஹதீதாகும் என்றும், ரூஹுல் பயானில்... காலையிலும், மாலையிலும் உம்மத்தின் செயல்பாடுகள் நாயகத்திடம் எடுத்துக் காட்டப்படுகின்றன. எனவே நாயகம் அவர்கள் மீது சாட்சி கூறுவர்' என்றும், மதாரிகில் நாயகம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முஃமின், காபிர், முனாபிக் அனைவரின் மீதும் சாட்சியாவார்கள் என்றும் விளக்கம் வந்துள்ளது.ஆக இவ்வசன விளக்கம் மூலம் பெருமானார் உலக துவக்கம் முதல் இறுதிவரை உள்ள அனைவரின் ஈமான், குப்ர், நயவஞ்சக நிலைகளையும் அறிகின்றனர். எனவே நாளை கியாமநாளில் அனைவரின் மீதும் சாட்சியாகின்றனர் என்பது தெளிவாகிறது.

குர்ஆன் கூறுகிறது:-

مَنْ ذَا الَّذِ يْ يَشْفَعُ عِنْدَهُ اِلَّا بِاِذْنِه يَعْلَمُ مَا بَيْنَ اَيْدِيْهِمْ وَمَا خَلْفَهُمْ.

அவனுடைய அனுமதியின்றி அவனிடம் பரிந்து பேசுபவர் யார்? (படைப்பினங்களான) அவர்களுக்கு முன்னுள்ளவற்றையும், அவர்களுக்குப் பின்னுள்ளவற்றையும் அவர் அறிவார்.

இவ்வசனத்திற்கு தப்ஸீர் நைஷாபூர், ரூஹுல் பயானில் 'முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பபடைப்பினங்களுக்கு முன்னுள்ள நிலைகளையும், கியாம நாளுக்கு பின்னுள்ள நிலைகளையும் அறிவார்கள் என்று விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

ஆயத்துல் குர்ஸியின் துவக்கமும், இறுதியும் இறைவனின் தன்மைகளையும் 'மன்தல்லதீ முதல் பிமாஷா' வரையுள்ளவை மனிதர்களுக்கு இறைவனின் அனுமதிப்படி சிபாரிசு புரியக் கூடிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களது தன்மைகளையும் விவரிப்பதாக பிரபல தப்ஸீர்கள் கூறுகிறது.

நோயாளியின் நோயை அறிந்தவர்தானே மருத்துவம் செய்ய இயலும்?

மனிதர்களின் நிலைகளை அறிந்தவர்தானே சிபாரிசு செய்ய முடியும்.

இன்னும் வெறுமனே வெளிப்படையான நிலைகளை மட்டும் அறிந்து கொண்டு இறைவனிடம் சிபாரிசு செய்ய முடியுமா?

ஆக மனிதர்களின் அக, புற நிலைகளை அறிந்தே நாயகம் சிபாரிசு செய்கிறார்கள். மேலும் நாயகம் அவர்கள் கியாம நாளின் தன் நிலையையும் அறியவில்லை என்று சிலர் கூறுவது மிகப் பெரிய அறியாமையாகும். ஆயத்துல் குர்ஸியின் தொடரில் வரும்...

وَلَا يُحِيْطُوْنَ بِشَيْءٍ مِنْ عِلْمِهِ اِلَّا بِمَا شَآءَ ;

அவரது ஞானத்திலிருந்து அவர் நாடியதைத் தவிர எவ்வொன்றையும் அவர்கள் சூழ்ந்தறிந்து கொள்ள முடியாது என்ற வாசகத்திற்கு தப்ஸீர் ரூஹுல் பயானில்:- இங்கு நாயகத்தைச் சுட்டி பேசப்படலாம். ஏனெனில் அவர்கள் அனைவரின் மீதும் சாட்சியாளராவதால் அனைத்து மக்களின் அக, புற, இம்மை, மறுமை நிலைகளை அறிகிறார்கள். மேலும் ஒரு வலியின் இல்ம் நபியில் இல்முக் கடலில் ஒரு துளிதான். அவ்வாறே மற்ற நபிமார்களின் இல்ம் நாயகத்தின் இல்முக் கடலில் அவ்வாறே. நாயகத்தின் இல்ம் நாயனின் இல்முக் கடலில் ஒரு துளியே.

தப்சீர் காஜினில்.... அல்லாஹ் தனது நபிமார், ரசூல்மார்களுக்கு தன் இல்முல் ஙைபிலிருந்து சிறிது வழங்குகிறான். அதுவே அவர்களது நபித்துவத்தின் ஆதாரமாகும். இதையே இறைவன் : 'இறைவனது இல்முல் ஙைபிலிருந்து அவன் நாடிய ரஸூல்மார்களைத் தவிர எவருக்கும் வெளிப்படுத்தமாட்டான்' என்ற வசனத்தில் தெளிவு படுத்துகிறான்.

மஆலிமுத் தன்ஜீலில்:- 'ரஸூல்மார்கள் அறிவித்ததைத் தவிர்த்து வேறெதையும் இல்முல் ஙைபிலிருந்து மக்கள் அறிய முடியாது' என விளக்கம் வந்துள்ளது.

ஆக இவ்வசன வாசகம் இறைவனைக் குறிப்பதாக இருந்தால் ..'இறைவன் நாட்டமின்றி இல்முல் ஙைபை அறிய முடியாது. அப்படி இறை நாட்டப்படி இல்முல் ஙைபை பெற்றுக் கொண்டவர்களே நபிமார்கள். மேலும் நபிமார்களின் மூலம் சில முஃமின்களும் கொஞ்சம் பெற்றுக் கொள்கின்றனர்' என்பது தெளிவாகும்.

அவ்வாசகம் நாயகத்தை சுட்டுவதாகக் கொள்ளும் போது 'நாயகத்தின் இல்மை எவரும் சூழ்ந்தறிய முடியாது. நாயகத்தின் நாட்டப்படியே நபிமார்களும், மலக்குகளும் இல்முல் ஙைபை பெற்றுக் கொண்டுள்ளனர்' என்பது தெளிவாகிறது. இதை நாம் முதல் வசன ஆதாரத்திலேயே தெளிவுபடுத்தியுள்ளோம்.

5. وَمَا كَانَ اللهُ لِيُطْلِعَكُمْ عَلَى الْغَيْبِ وَلَاكِنَّ اللهَ يَجْتَبِى مِنْ رُسْلِهِ مَنْ يَشَاءُ.

(பொதுமக்களான) உங்களுக்கு இல்முல் ஙைபை அறிவித்துக் கொடுப்பது அல்லாஹ்விற்கான (தகுதிக்குரிய)து அல்ல எனினும் அல்லாஹ் (தன் இல்முல் ஙைபிலிருந்து அறிவித்துக் கொடுக்க) தனது தூதர்களில் தான் நாடியவர்களைத் தேர்வு செய்கிறான்.

இதற்கு பைளாவி, காஜின், கபீர், ஜமல், ஜலாலைன், ரூஹுல் பயான் என்பன போன்ற அநேக தப்சீர்களில் 'மனிதர்களின் அக நிலைகளை அறியும் மறைவான ஞானத்தை அல்லாஹ் தான் நாடிய ரசூல்மார்களுக்கே அளிக்கிறான்' என்று விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

சிலர் சில இல்முல் கைப் என்று சுட்டுவதால் அதில் முக்காலத்தின் இல்ம் இல்லை என்ற கருத்தல்ல. ஏனெனில் முக்காலத்தின் இல்மும் இறைவனது இல்மிலுள்ள மிக மிகக் கொஞ்சமே.

6.

وَعَلَّمَكَ مَالَمْ يَكُنْ تَعْلَمْ وَكَانَ فَضْلُ للهِ عَلَيْكَ عَظِيْمًا

நபியே தாங்கள் அறியாதிருந்த அனைத்தையும் தங்களுக்கு கற்பித்து விட்டோம். மேலும் இது தங்களின் மீதான மகத்தான அல்லாஹ்வின் கிருபையாகும்.

அதாவது வெளிப்படையான மார்க்கச் சட்டங்கள், அந்தரங்க இல்முல் கைப் என்ற விளக்கம் ஜலாலைன், காஜின், மதாரிக், ஜாமிஉல் பயான் போன்ற தப்சீர்களில் வந்துள்ளது.

தப்சீர் ஹுசைனில் பஹ்ருல் ஹகாயிகில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிஃராஜ் நான் சம்பவத்தின் போது குறிப்பிட்டார்கள்.... நான் அர்ஷுக்கு கீழிருந்த போது எனது தொண்டையில் ஒளிதுளி போடப்பட்டது. அப்போது நான் நடந்த, நடக்கப்போகிற அனைத்தையும் அறிந்து கொண்டேன் என்று வந்துள்ளது.

7

مَا فَر ◌َطْنَا فِى لْكِتَابِ مِنْ شَيْءٍ

நாம் இவ் வேதத்தில் எதையும் விட்டு வைக்கவில்லை.

குர்ஆன் அனைத்தையும் பொதிந்துள்ளது - காஜின். இங்கு கிதாப் எனில் லவ்ஹுல் மஹ்பூல். அதில் பிரபஞ்சத்தின் எந்த ஒரு படைப்பின் எந்த ஒரு செய்தியும் விடப்படவில்லை. – தப்சீர் அன்வாருத் தன்ஜீல். இவ்வேதம் எதையும் விட்டு வைக்க வில்லை. ஆனால் மஃரிபத் எனும் ஞானமுடையவரே அவற்றை அறிய முடியும். –அராயிசுல் பயான். இமாம் ஷஃரானியும் தபகாதே குப்ராவில் இதே கருத்தைப் பதிவு செய்கிறார்கள்.

ஆக குர்ஆன் லவ்ஹுல் மஹ்பூல் பிரபஞ்சத்தின் அனைத்தையும் பொதிந்துள்ளது. அவ்விரண்டுமே பெருமானாரின் இல்மில் உள்ளவைதான்.

இன்ஷாஅல்லாஹ் தொடர்ந்து நாம் அதை மேலும் ஆதாரங்களுடன் வலுப்படுத்துவோம்.

8

وَلَا رَطْبٍ وَلَا يَابِسٍ اِلَّا فِى كِتَابٍ مُّبِيْنٌ

பசுமையானதோ, காய்ந்ததோ இந்த தெளிவான கிதாபில் இல்லாமலில்லை.

கிதாப் எனில் லவ்ஹுல் மஹ்பூல். அதில் பிரபஞ்சத்தின் முக்காலச் செய்தியில் எதுவும் விடப்படவில்லை. அதை உலமா ரப்பானிகள் அறிவர்.-ரூஹுல் பயான்.

இது மலக்குகள் அறிய வேண்டி லவ்ஹுல் மஹ்பூலில் எழுதப்பட்டுள்ளது. –தப்ஸீர் கபீர்.

இதை தப்ஸீர் காஜின் உறுதி செய்கிறது.

மதாரிக்கிலும், தன்வீருல் கியாஸில் வரும் ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்களின் விளக்கத்திலும்...'அல்லாஹ் லவ்ஹுல் மஹ்பூலில் பிரபஞ்சத்தின் அனைத்துச் செய்திகளையும் எழுதி விட்டான்' என்று சுட்டப்பட்டுள்ளது.

ஆக லவ்ஹுல் மஹ்பூலின் இல்ம் மலக்குகளுக்கும், சில குறிப்பிட்ட உலமா ரப்பானிகளுக்குமுண்டு. ஆனால் இவர்களது இல்ம் நாயகத்தின் இல்முக் கடலில் ஒரு துளியே.

9

نَزَّلْنَا عَلَيْكَ الْكِتَابَ بَيَانًا لِكُلِّ سَيٍ

நாம் இவ்வேதத்தை அனைத்து விஷயங்களையும் விளக்கக் கூடியதாக உம்மீது அருளினோம். தீன், துன்யா அனைத்தும் சில சுருக்கமாக, சில விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

-தப்ஸீர் ஹுசைன்.

தீன், துன்யா, முந்தைய நபிமார்கள், அவர்களுது உம்மத்துக்களின் நிலைகள் எல்லாம்.- ரூஹுல் பயான்.

ஒருநான் அல்லாஹ்தனது வேதத்தில் எதையும் விட்டு வைக்கவில்லை என முஜாஹித் ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறிய போது ஒருவர் புதையல் பற்றி கூறப்பட்டுள்ளதா? என்று வினவ, 'ஆளில்லா வீட்டில் உங்கள் பொருளிருக்க நீங்கள் அங்கு பிரவேசிப்பது உங்கள் மீது குற்றமாகாது' என்ற வசனத்தை ஓதிக் காட்டினார்கள். –தப்ஸீர் இத்கான்.

ஆக குர்ஆன் எதையும் விட்டு வைக்கவில்லை. அல்லாஹ் குர்ஆனை நாயகத்திற்கு கற்பிக்காமல் விட்டு வைக்கவில்லை.

اَلرحمٰن علم القران

அந்த ரஹ்மான் தனது வேதத்தை தனது நபிக்கு கற்பித்தான்.

10

وَتَفْصِيْلَ الْكِتَابِ لَارَيْبَ فِيْهِ

திருமறையை விவரிப்பதாகவுமுள்ளது. இதில் எவ்வித சந்தேகமுமில்லை.

எல்லா சட்டதிட்டங்களின் விளக்கமும் - ஜலாலைன்.

அக நுட்பங்கள், ஷரீஅத் சட்டங்கள், வானசாஸ்திரக் கலை விளக்கம், தக்தீரிலுள்ள எல்லா விசயங்களின் விளக்கமும் மறையிலுள்ளது. -ரூஹுல் பயான்.

ஆக குர்ஆனில் ஷரீஅத் சட்டங்கள் மட்டுமின்றி எல்லா இல்முகளும், லவ்ஹுல் மஹ்பூலிலுள்ள இறைவனது தக்தீருடைய விசயங்களுமுள்ளது.

குர்ஆனுடைய கல்வி நபி நாயகத்திற்கு உள்ளதெனில் மேற்கண்ட எல்லா கல்வி ஞானங்களும் உண்டென்பது தெளிவாகிறது.

11

مَا كَانَ حَدِيْثًا يُّفْتَرٰى وَلٰكِنْ تَصْدِيْقَ الَّذِى بَيْنَ يَدَيْهِ وَتَفْصِيْلَ كُلِّ شَيْئٍ

இ(வ்வேதமான)து இட்டுக் கட்டப்பட்ட செய்தியல்ல. மாறாக முன் நடந்ததை மெய்ப்பிக்கக் கூடியதாகவும், மேலும் அனைத்தையும் விவரிக்கக் கூடியதாகவும் உள்ளது.

12اَلَرحْمنُ عَلَّمَ الْقُرْاٰنَ خَلَقَ الْاِنْسَانَ عَلَّمَهُ الْبَيَانَ

ரஹ்மான் (தனது ஹபீபுக்கு)குர்ஆனைக் கற்பித்தான். (அம்மா)மனிதரைப் படைத்தான். அவர்களுக்கு விளக்கத்ததைக் கற்பித்தான்.

13 مَا اَنْتَ بِنِعْمَةِ رَبِّكَ بِمَجْنُوْنٍ

தாங்கள் தங்களது ரப்பின் கிருபையால் (காபிர்கள் கூறுவது போல்) பைத்தியக்காரர் அல்ல.

முற்றிலும் அறிவிழந்தவர் பைத்தியம். ஆனால் தாங்கள் முற்றிலும் அறிந்தவர். -ரூஹுல் பயான்.

14 وَلَئِنْ سَاَلْتَهُمْ لَيَقُوْلُنَّا اِنَّمَا كُنَّا نَخُوْضُ وَنَلْعَبُ

நாயகமே தாங்கள் அவர்களிடம் வினவினால் அவர்கள் கூறுவர் நாங்கள் வீணானதில் மூழ்கி, விளையாட்டுக்களிலிருந்தோம்.

இவ்வசனத்தின் கீழ் தப்ஸீர் துர் மன்சூர்,தப்hயிpல் வரும் இப்னு அப்பாஸ் அவர்களின் ரிவாயத்:- முனாபிக் ஒருவன் கூறினான்:- இன்ன நபரின் ஒட்டகம் இன்ன இடத்தில் இருக்கிறதென்று (காணாமல் போன ஒட்டகத்தின் தகவலை) முஹம்மது கூறுகிறார். மறைவான விசயம் இவருக்கு எப்படித் தெரியும்?

ஆக நாயகத்தின் இல்முல் கைபை மறுப்பது முனாபிக் என்னும் நயவஞ்சகர்களின் குணமாகும்.

فَاَوْحٰى اِلٰى عَبْدِهِ مَااَوْحٰى

தான் வஹி (அறிவிக்க நாடிய) அனைத்தையும் தன் அடியார் அளவில் அல்லாஹ் வஹி அறிவித்தான்.

அதன் அளவு விவரிக்கப்பட முடியாதென்பதால் பொதுவாக 'அனைத்தும்' என்ற வாசகம் இடம் பெற்றுள்ளது. இது நடந்தது மிஃராஜின் போது. –மதாரிஜுன் நுபுவ்வஹ்.

وَمَاهُوَ عَلى الْغَيْبِ بِضَنِيْنَ

மறைவானவற்றை அறிவிப்பதில் நாயகம் கஞ்சரல்ல. ஜோசியர்கள், சூனியக்காரர்கள் போல மறைத்து ஒளித்துப் பேசுவதில்லை. (மக்களுக்குத் தேவையான) அனைத்து மைபுகளையும் நாயகம் தெளிவாக எடுத்துக் சொல்கின்றனர். –மஆலிமுத்தன்ஜீல், காஜின்.

وَعَلَّمْنَاهُ مِنْ لَدُنَّا عِلْمًا

ஹழ்ரத் கிள்ர் அலைஹிஸ்ஸலாமுக்கு நம்மிலிருந்து இல்மைக் கற்றுக் கொடுத்தோம்.

அல்லாஹ் கிள்ரு நபிக்கு இல்முல் மைப் வழங்கியதை பைளாவி, இப்னு ஜரீர், ரூஹுல் பயான், மதாரிக், காஜின் தெளிவுபடுத்துகிறது.

இதை இப்னு அப்பாஸ் அவர்களும் ஆமோதித்துள்ளனர்.

وَكَذَالِكَ نُرِى اِبْرَاهِيْمَ مَلَكُوْتِ السَمٰوتُ وَالْاَرْضُ

மேலும் இவ்வாறே இப்றாஹீம் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு வான், பூமியின் ஆட்சி (நிலை)களை நாம் காட்டினோம்.

நபி இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாமுக்கு வானம், பூமி திறந்து காட்டப்பட்டது. வானில் அர்ஷ், குர்ஸி உட்பட பூமியில் கடைசிவரை மனித நிலைமைகள் உட்பட ஆன பல அற்புதங்களைக் கண்டனர். இதை காஜின், ரூஹுல் பயான், இப்னு ஜரீர், கபீர் போன்ற தப்ஸீர்கள் உறுதி செய்கிறது.

ஹஜ்ரத் முஜாஹித் ரஹிமஹுல்லாஹ் அவர்களும் அவ்வாறே குறிப்பிட்டதை மதாரிகில் கூறப்பட்டுள்ளது.

அர்ஷ், குர்ஸியில் லவ்ஹுல் மஹ்பூலும் வந்து விடும். ஆக நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு லவ்ஹுல் மஹ்பூலை விட அதிக இல்ம் வழங்கப்பட்டுள்ளது என்றால் செய்யிதுல் அன்பியா-நபிமார்களின் தலைவர் நம் நாயகம் எம்பிரானுக்கு எவ்வளவு இல்ம் வழங்கப்பட்டிருக்கும்?

لاَ يَأْ تِيْكُمَا طَعَامٌ تُرْزَقَانِهِ اِلَّا نَبَّأْتُكُمَا بِتَأْوِيْلِه

ஹழ்ரத் யூசுப் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறினர்: (நீங்கள் கேட்ட) கனவு விளக்கத்தை உங்களுக்கு நான் அறிவிக்காது உங்களுடைய உணவு உங்களிருவருக்கும் வராது.

இதற்கு தப்ஸீர் ரூஹுல் பயான், காஜின், கபீரில்:- அவ்வுணவு தானியன் எங்கிருந்து எப்படி வந்தது என்ற எல்லா தகவல்களையும் அறிவிப்பதாக.... மேலும் கபீரில் கொஞ்சம் கூடுதலாக....அவ்வுணவு பயன்தராதா, தருமா? என்பதையும் அறிவிப்பதாக வந்துள்ளது.

மேலும் ذَالِكُمَا مِمَّا عَلَّمَنِ رَبِّى இது என் ரப்பு எனக்கு கற்பித்தவற்றில் கொஞ்சம் தான் என்றும் ஹஜ்ரத் யூசுப் அலைஹிஸ்ஸலாம்அவர்கள் கூறினர்.

நாயகத்தின் இல்முக் கடலில் துளி பெற்ற நபிமார்களின் இல்ம் இவ்வளவு என்றால் நபிபெருமானாரின் இல்ம்?

وَأُ نَبِّئُكُمْ بِمَا تَأْكُلُونَ وَمَا تَدَّخِرُوْنَ فِى بُيُوْتِكُمْ

நீங்கள் உண்பதையும், உங்கள் வீடுகளில் சேகரிப்பதையும் நான் உங்களிடம் அறிவிக்க முடியும் (என ஹழ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவாகள் கூறினர்)

நாயகத்தின் இல்முல்ஙைப் சமுத்திரத்தில் மற்ற நபிமார்களது இல்ம் ஒரு துளி. துளியே இவ்வளவு எனில் சமுத்திரத்தை விவரிக்க முடியுமா?

இல்முல் ஙைபுக்கான ஹதீது ஆதாரங்கள்.

·நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஒரு இடத்தில் நின்று படைப்பின் துவக்கம் முதல் சுவனவாதிகள் சுவனமும், நரகவாதிகள் நரகமும் நுழையும் வரையுள்ள (அனைத்து) செய்திகளை (யும்) எங்களுக்குக் கூறினர்.

-ஹழ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு

நூல்: புகாரி, படைப்புக்களின் துவக்கப் பாடம்.

·அம்ர் பின் அக்தபின் ரிவாயத்தை முஸ்லிமின் ரிவாயத் மூலம் மிஷ்காத் முஃஜிஸா பாடத்தில் வருகிறது:- கியாமநாள் வரை நடக்கும் அனைத்தையும் எங்களுக்கு நாயகம் அறிவித்தனர்.

·கியாமநாள் வரை நடக்கும் எதையும் விடாமல் நாயகம் எங்களுக்கு கூறினர் என்ற ஹழ்ரத் ஹுதைபாவின் ரிவாயத் புகாரி, முஸ்லிமிலுள்ளது.

·சவ்பான் ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கும் முஸ்லிமின் ரிவாயத் 'மிஷ்காத்தில்:- எனக்கு பூமி சுருட்டிக் காட்டப்பட்டது. அதன் கிழக்கு, மேற்குகளையெல்லாம் நான் கண்டேன் என நாயகம் கூறினர்.

·நான் எனது ரப்பை அழகுத் திருவுருவில் கண்டேன். அவன் எனது நெஞ்சுக்கிடையில் கை வைத்தான். அதன் குளுமையை நான் உணர்ந்தேன். வானம், பூமியிலுள்ள அனைத்தையும் நானறிந்து கொண்டேன் என நாயகம் கூறினர். – அப்துர் ரஹ்மான் பின் ஆயிஷ், மிஷ்காத்.

·இமாம் கர்கானியின் ஷரஹ் மவாஹிபுல்லதுன்னியில் ஹஜ்ரத் இப்னு உமரின் ரிவாயத்:- அல்லாஹ் எனக்கு உலகைக் காட்டினான். நான் இவ்வுலகை அதில் கியாமநாள் வரை நடக்கப்போவதையெல்லாம் கண்டேன். என் உள்ளங்கையைப் பார்ப்பது போல் அவற்றைப் பார்த்தேன்.

·எனக்கு எல்லாப் பொருட்களும், விஷயங்களும் வெளிப்பட்டது. நான் (அனைத்தையும்) அறிந்தேன். –திர்மிதி, மிஷ்காத்.

·நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் எங்களை இந்த நிலையில் விட்டுச் சென்றார்கள்.... ஒரு பறவை அதன் சிறகை அசைப்பதைப் பற்றிக் கூட எங்களுக்கு சொல்லித் தந்துள்ளனர். – அபூதர் கிபாரி, முஸ்னத் அஹ்மத்.

·மிஷ்காத்தில் ஹஜ்ரத் ஹுதைபாவின் ரிவாயத் உலக இறுதி நாள் வரை குழப்பம் விளைவிக்கக் கூடிய கிட்டத்தட்;ட 300க்கும் மேற்பட்ட குழப்பவாதிகளை அவர்களின் பெயர்கள், அவர்கள் தந்தைமார்கள், அவர்கள் என்ன கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் என்பதுட்பட ஒன்றையும் விடாது கூறினர். –அபூதாவூத்.

·நபி தாவூத் அலைஹிஸ்ஸாலம் அவர்களுக்கு ஜபூர் வேதத்தை இந்தளவு இலகுவாக்கப்பட்டிருந்தது. குதிரைக்கு லாடம் பூட்டும்படி சொல்வார்கள். லாடம் பூட்டி முடிப்பதற்குள் ஜபூரை ஓதி முடித்து விடுவார்கள். -ஹஜ்ரத் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு. மிஷ்காத், புகாரி.

(நாயகத்தால் எப்படி உலக துவக்கம் முதல் சுவனபதி நரக நிகழ்ச்சிகள் வரை ஒரே இடத்தில் நின்று சொல்லிக் கொண்டே இருக்க முடிந்தது என்று கேட்பவர்களுக்கு இது ஆதாரமாகும்.)

·பெருமானார் இரு கப்ரை கடந்த போது அதில் அதாபு நடைபெறுவதைக் கண்டு - இவர்கள் பெரும் பாவத்திற்காக அதாபு செய்யப்படவில்லை. ஒருவர் சிறுநீர் கழித்து சுத்தம் செய்யாததாலும், மற்றும் கோள் பேசியதாலும் அதாபு செய்யப்படுகிறார்கள் என்று கூறினர். பின்பு பசுமைக் கிளையை பறித்து இரண்டாக உடைத்து இரண்டு கப்ரிலும் நட்டி..... இது காயும் வரை அதாபு லேசாக்கப்படும் என்று கூறினர். –புகாரி. (கப்ரில் நடப்பதை-அதாபை-அது எதனால் என்பதையும் அறிந்தனர் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்)

·ஒருமுறை பெருமானார் மிம்பரில் நின்று கியாமநாளைப் பற்றி அதில் ஏற்படும் அதி பயங்கர நிகழ்வுகளைப் பற்றிப் பேசிவிட்டு பின்பு யார் எதை வேண்டுமானாலும் கேட்கலாம். அல்லா ஹ்வின் மீதாணையாக! இதே இடத்திலிருந்து கொண்டு நான் பதில் சொல்கிறேன் என்றபோது, ஒருவர் நான் போகுமிடம் எது என்று கேட்க, நரகம் என்றனர். அப்துல்லாஹ் பின் ஹுதாபா தன் தந்தை யாரென்று கேட்க ஹுதாபா என்றனர். பின்பும் (என்ன வேண்டுமானாலும்) கேளுங்கள் கேளுங்கள் என்று கூறிக் கொண்டே இருந்தனர். –புகாரி.

ஒருவரின் நாளை –எதிர்காலம் எப்படியிருக்கும்? என்பது மபாதிஹுல் கைப் எனப்படும் 5 கைபில் உள்ளது. அதை அறிந்ததால்தான் சுவன நபர் யார்? நரகவாதி யார்? என நாயகத்தால் கூற முடிந்தது.

·கைபர் நாளில் பெருமானார் கூறினர்:- அல்லாஹ்வும் ரசூலும் நேசிக்கும் ஒருவரது கையில் நாளை இக்கொடியை நான் கொடுப்பேன். அல்லாஹ் அவரது கரத்தின் மீதுதான் கைபர் வெற்றியளிப்பான்.-மிஷ்காத், பாபு மனாகிபு அலி.

·மிஷ்காத்தில் அபூதர் கிபாரிரலியல்லாஹூ அன்ஹுவின் ரிவாயத்:- என் உம்மத்தின் அனைத்து நல்ல, தீய செயல்களும் எனக்கு காட்டப்பட்டது. நோவினை தருபவற்றை பாதையிலிருந்து நீக்குவதும் அவர்களது நல் அமலில் இருக்கக் கண்டேன்.

·பத்ரு சமயம் பெருமானார் நாளை போரில் இன்னார், இன்னார் இன்ன இடத்தில் கொல்லப்பட்டுக் கிடப்பார் என்று தங்களது திருக்கரத்தை பூமியில் வைத்துக் கூறினர். சொன்னது போல அதே இடங்களில் கொஞ்சமும் இடம் நகராமல் காபிர்கள் கொல்லப்பட்டுக் கிடந்தனர்.- ஹழ்ரத் அனஸ் ரலியல்லாஹூஅன்ஹு , முஸ்லிம்.

யார் எங்கு மரணிப்பார் என்பதும் மபாதிஹுல் ஙைப் எனப்படும் ஐந்து ஙைபுகளில் உள்ளதாகும்.

·மிஷ்காத்தில் அபூஹுரைரா ரலியல்லாஹூ அன்ஹுவின் ரிவாயத்:- ஒரு வேடர் கூறினார்:- அல்லாஹ்வின் மீதாணை! இன்று போல் (அதிசயம்) நான் என்றும் கண்டதில்லை. ஒரு ஓநாய் பேசியது. இதை விட ஆச்சரியம் ஒன்று கூறுகிறேன்:- 'இரு மைதானங்களுக்கிடையேயுள்ள சோலையில் - மதீனாவில் உள்ள ஒரு நபர் (நாயகம்) உங்களுக்கு நடந்த, பின்னால் நடக்கப் போகிறவற்றையெல்லாம் அறிவிக்கிறார்கள்.

(ஒரு ஓநாய் அறிந்ததை நம்மில் சிலர்... அல்லாஹ் நேர்வழி காட்டுவானாக)

·தப்ஸீர் காஜினில் சூரா ஆல இம்ரானின் 179 ம் வசன விளக்கத்தின் கீழ் வருகிறது:- பெருமானார் கூறினார்கள்ளூ ஹஜ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாமுக்கு காட்டப்பட்டது போல எனக்கும் என் உம்மத்தினரை அவர்கள் மண்ணாக இருக்கும் தோற்றத்திலேயே காட்டப்பட்டது. அவர்களில் என்னை ஏற்போர் யார்? மறுப்போர் யார்? என்பதையும் நான் அறிந்து கொண்டேன். இதையறிந்த முனாபிக்குகள்... அவர்களுடனுள்ள எங்களையே (நாங்கள் அவர்களை ஏற்கவில்லை என்பதை) அறியாத அவர்கள் எப்படி பின்வரும் படைப்புகளை(ப் பற்றி) அறிவர் என்று ஏளனமாகப் பேசினர். இச்செய்தி எட்டியதும் நாயகமவர்கள் மிம்பரில் நின்று அல்லாஹ்வைப் புகழ்ந்து கூறினர். மக்களுக்கு என்னாகி விட்டது? என்னுடைய கல்வி, ஞானத்திலேயே குறை காண்கின்றனர். உங்களுக்கும், கியாம நாளுக்கும் மத்தியில் நடக்கும் எதைப் பற்றிக் கேட்டாலும் நான் பதிலுரைப்பேன்.

(நாயகத்தின் இல்மில் குறை காண்பது முனாபிக்கின் அடையாளம்.)

·மிஷ்காத்தில் இப்னு மஸ்ஊத் ரலியல்லாஹூ அன்ஹு வின் ரிவாயத் : நிச்சயமாக நான் தஜ்ஜாலுடன் போர் புரியக் கூடியவர்கள் பெயர்களையும் அவர்களது தந்தையின் பெயர்களையும், அவர்களது குதிரையின் நிறங்களையும் நானறிகிறேன். அது பூமியின் மீதமையும் சிறந்த சவாரிகளில் ஒன்றாகும்.

·ஹஜ்ரத் ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் பெருமானாரிடம் வினவுகின்றனர்: விண்மீன்கள் அளவு நன்மையுள்ளவர் உண்டா? ஆம்.உமர் இருக்கிறார்கள் என்று பதில் கூறுகிறார்கள். (மிஷ்காத்)

ஆக கியாமநாள் வரையுள்ள மக்களில் எவர் எவ்வளவு நன்மை பெறுவார் என்பதையும் விண்ணில் எவ்வளவு நட்சத்திரங்கள் உள்ளன என்பதையும் நாயகம் அறிந்துள்ளனர். அறிந்தால்தானே கூடுதல், குறைவை, நிகர் நிலையை அறிவிக்க இயலும்?

மேலும் நன்மைகள் வெளிரங்க அமல்களை வைத்து அறிவிக்கப்படாது. அந்தரங்க நிய்யத்தைப் பொறுத்தே கொடுக்கப்படும் என்பதையும் நான் நன்கறிந்துள்ளோம்.

இன்னும் ஏகப்பட்ட ஹதீது ஆதாரங்கள் இருந்தாலும் இவைகளே போதுமானவை என்று கருதுகிறோம்.

ஆக... இந்த ஆலம் நாயகத்தின் கண்முன் உள்ளங்கை நெல்லிக் கனி போல.

ஆலம் என்பதில் ஆலமுல் அஜ்ஸாம் எனும் பூமி, ஆலமுல் அர்வாஹ், ஆலமுல் அம்ர், ஆலமுல் இம்கான், ஆலமுல் மலாஇகா, அர்ஷ், புர்ஷ், குர்ஸ் அனைத்தும் அடங்கும். லவ்ஹுல் மஹ்பூலும் ஆலத்திலுள்ளதே.

மேலும் முக்கால இல்மும் நாயகத்திற்குண்டு. இன்னும் இரவில் தனிமையில் நடக்கும் ரகசியமும் நாயகம் அறிகின்றனர். எனவேதான் ஹுதைபாவே அப்துல்லாஹ் அவர்களின் தந்தை எ ன்பதை அறிவித்தனர். அதுபோலவே எவர், எங்கு, எப்போது எப்படி என்ன நிலையில் (முஃமினா? காபிரா?) மரணிப்பார் என்பன போன்ற மபாதிஹுல்கைப் எனப்படும் 5 கைபுகளும் நாயகத்தின் இல்மில் உள்ளது என்பதை மேற்கண்ட குர்ஆன் ஹதீது ஆதாரம் மூலம் அறிகிறோம்.

இல்முல் கைப் விஷயத்தில் ஹதீது கலையாளர்களின் கூற்றுக்களை கவனித்தால்... புகாரியின் விரிவுரை ஐனி, ஃபத்ஹுல் பாரி, மிஷ்காத் விரிவுரை மிர்காத், ஷரஹ் ஷஃபா, மவாஹிப், அஷ்அத்துல் லம்ஆத் நூல்களின் பிரபலமான ஆசிரியர்கள் இமாம் அஹ்மத் கஸ்தலானி, முல்லா அலி காரி, இமாம் ஜர்கானி போன்ற பலமும் நாயகத்தின் இல்முல் கைபை மேற்கண்ட ஹதீதுகளின் விளக்கத்தின் கீழ் உறுதி செய்துள்ளனர்.

அதற்குப் பின் வந்த உலமாக்களும் முக்கியமாக ஷெய்கு அப்துல் ஹக் முகத்திஸ் தெஹ்லவி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் هُوَ الْأَوَّلُ وَالْآخِرُ وَالظَّاهِرُ وَالْبَاطِنُ وَهُوَ بِكُلِّ شَيْءٍ عَلِيمٌ . என்ற வசனத்தில் வரக்கூடிய முதல், கடைசி, வெளிப்படை, அந்தரங்கம் அனைத்தையும் அறிதல் எனும் 5தன்மைகளும் இறைவனின் புகழாகவும் இன்னொரு பக்கம் பெருமானாரின் தன்மைகளாகவுமுள்ளது. ஏனெனில் பெருமான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் முதல், இறுதி, அந்தரங்க, வெளிரங்க அனைத்து விசயங்களையும் அறிகிறார்கள் என்று கூறியுள்ளனர். –மதாரிஜ்

·ஆதாரங்களின் அடிப்படையில் பெருமானாரின் இல்முல் கைப் உறுதியாகிறது. இல்முல் கைப் இல்லை என்று பொதுவாக வந்துள்ள ஆதாரங்கள் அல்லாஹ் கற்பிக்காமல் தாங்களே சுயமாக எந்த மறைவான ஞானத்தையும் பெற்றுக் கொள்ள முடியாது என்பதையே காட்டுகிறது. – அல்லாமா ஜர்கானி, ஷரஹ் மவாஹிப்.

•ஷபா ஷரீபில் காழி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறியுள்ளனர்: அல்லாஹ் குறிப்பாக நபிகளாருக்கு தீன், துன்யா, உம்மத்தின் முன் வாழ்ந்த சமூகத்தின் பிற்காலத்தவர்களின் சின்ன சின்ன விஷயங்களையும் கூட இன்னும் கல்புகளின் இரகசியங்களை, அடியார்களின் அமல்கள், நன்மை தீமை கணக்குகள் என அனைத்தையும் கற்பித்து விட்டான்.

புர்தாவில் இமாம் பூசரி ரஹிமஹுல்லாஹு அவர்கள்...

وَإِنَّ مِنْ جُوْدِكَ الدُّنْيَا وَضَرَّتَهَا   وَمِنْ عُلُوْمِكَ عِلْمَ اللَّوْحِ وَالْقَلَمِ

துன்யா, ஆகிரத்தவர்களின் கொடையே லவ்ஹுல் மஹ்பூலிலுள்ளதும், எழுதுகலம் எழுதியதும் தங்களின் இல்மில் சிறியதே என்று புகழ்ந்துரைத்தனர். புர்தா விரிவுரையில் அல்லாமா இப்ராஹீம் பாஜூரி மெய்தான். லவ்ஹுல் மஹ்பூலில் எழுது கோல் எழுதியது கியாமநாள் வரை நடப்பதைத்தான். ஆனால் பெருமானாரின் இல்ம் அதையும் விட அதிகமானது. கியாம நாளின் - ஆகிரத்தின் நிலைகளையும் அல்லாஹ் நாயகத்திற்கு அறிவித்துத் தந்தான்.

இக்கவி அடியின் கீழ் முல்லா அலீ காரி குறிப்பிடுகிறார்கள்:... நாயகத்தின் இல்ம் எவ்வளவோ சிறிய, பெரிய விஷயங்களையும், ஞானங்களையும் உடையது. அது இறைவனது தாத், சிபாத்துடன் சம்பந்தப்பட்டது. எனவே லவ்ஹுல் மஹ்பூல், எழுதுகோலின் இல்ம் நாயக இல்மின் சமுத்திரத்தில் ஒரு துளியே.

இன்னும் இது போன்ற எத்தனையோ விளக்கங்களின் பார்வையிலும், இமாம் பூசரி , ஷைக் சுலைமான் ஜமல், இப்னு ஹஜர் மக்கி, அல்லாமா கர்ழத்தி, ஹாபிழ் அஹ்மத் இப்னு முபாரக், ஹஜ்ரத் முஜத்தித் அல்பதானி, மவ்லானா பஹ்ருல் உலூம் அப்துல் அலி லக்னவி, அல்லாமா ஷன்வாயீ, ஷரஹ் அகாயிதுன் நஸபியின் ஆசிரியர் உட்பட பலரது கூற்றுக்களிலும் நாயகத்தின் இல்மின் எழுதுகலம் எல்லைக் கடந்தது என்பதையும், பெருமானாரின் இல்முல்கைப் உறுதி செய்யப்பட்டிருப்பதையும் காண்கிறோம்.

துர்ருல் முக்தார் ஹஜ் பாடத்தில் நாயகம் தம் ஜீவிய காலத்தை அறிந்ததால் தான் ஹஜ்ஜை ஹிஜ்ரி 9ம் வருடம் வரை தள்ளி வைத்தார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

وَوَاقِفُوْنَ لَدَيْهِ عِنْدَ حَدِّهِمِ

என்ற புர்தா ஷரீப் வரியின் விரிவுரையில் சர்பூனி ரஹிமஹுல்லாஹு அவர்கள் கூறுகிறார்கள்:- ஹஜ்ரத் முஆவியா ரலியல்லாஹு அன்ஹுவின் ரிவாயத் உண்டு. அதில் ஹழ்ரத் முஆவியா அவர்கள் எழுதும் போது மைக் கூட்டை, பேனாவை இப்படி வையுங்கள்.

'பா.ஃ.'வை இப்படி எழுதுங்கள். سينஸீனை வேறுபடுத்திக் காட்டுங்கள். ميمமீமை கோணலாக்காதீர்கள் என்று கூறுவார்களாம். ஆனால் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எழுதவோ, படிக்கவோ கற்கோ இல்லை. முன்னோர்களின் நூற்களையும் படித்தது கிடையாது.

ولا تخطه بمنك நீர் உமது வலக்கரம் கொண்டு எழுதுவதில்லை எனும் வசன விளக்கத்திற்கு ரூஹுல் பயானில் வருகிறது நாயகம் எழுத அறிந்திருந்தனர். எழுத்தை அறிவிக்கவும் செய்துள்ளனர். ஆனால் எழுதவில்லை. எழுதிடவில்லை என்பதே இவ்வசன விளக்கம்.

**மறுப்பாளர்களின் கருத்தில் இல்முல்கைபுக்கு ஆதாரம்**

·நபிமார், வலிமார்களுக்கு இல்முல்கைப் இல்லை என மக்கள் பேசுகின்றனர். நான் கூறுகிறேன் மெய்யடியார்கள் எதைப் பார்க்கின்றனரோ அதன் அறிவும், மறைவான இல்மும் கிடைக்கிறது.இந்த இல்ம் உண்மை. பெருமானார் ஹுதைபியா மற்றும் ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹுமா அவர்களின் விசயங்களை அறியவில்லை என்று ஆதாரப்படுத்துவது தவறான புரிதலாகும். ஏனெனில் இல்முக்கு இல்லை வெளிப்படுத்துவதற்கு காரணங்களை நெறிப்படுத்துதல் அவசியம். (ஹாஜி இம்தாதுல்லாஹ் சாஹிப்- ஷமாஇமே இம்தாதிய்யா பக்கம் 11)

·நபிமார்களுக்கு ஒவ்வொரு நொடிப்பொழுதும் மறைவான காட்சிகளும், கைபான விஷயங்களும், இறைவனது தொடர்பும் இருந்து கொண்டிருக்கும். அதனால்தான் நபிகள் கூறினார்கள் நான் அறிவதை நீங்கள் அறிந்தால் குறைவாக சிரிப்பீர்கள். அதிகம் அழுவீர்கள். மேலும் நீங்கள் காணததவைகளை நான் காண்கிறேன் என்றும் கூறினார்கள்.

(மௌலவி ரஷீத் அஹ்மது கங்கோஹி, -லதாயிபே ரஷீதிய்யா பக்கம் 27)

·ரசூல்மார்கள், வலிமார்கள் கைகை மேலும் எதிர்கால விசயங்களை அறிகின்றனர் என்பதை மார்க்கம் ஏற்கிறது. எல்லாம் அல்லாஹ்வின் நாட்டப்படியே நடக்கிறது எனும் போது, அதைத் தடுக்க எவராலும் முடியாது எனும போது அதை அறிவித்துக் கொடுப்பதில் எந்தப் பிரச்சனையுமில்லை. மேலும் மனிதன் சுயமாக மறைவான கைபுகளை அறிய முடியும் என்பது எம் கருத்தல்ல. மாறாக அல்லாஹ் தான் நாடியவர்களக்கு அறிவித்துக் கொடுக்கும் போது அதை யார் தடுக்க முடியும்? அவ்வாறு இறைவன் நபிமார், வலிமார்களுக்கு அறிவித்துக் கொடுப்பதிலிருந்து அவர்கள் சிலவற்றை மற்றவர்களுக்கும் அறிவிக்கின்றனர். மாறாக ஒருவர் தாமே சுயமாக அறிவதாகக் கூறினால் அவர் காபிர் என மார்க்கம் கூறுகிறது.

(மௌலவி அஷ்ரப் அலி தானவி- தக்மீலுல் யகீன் பக்கம் 135)

·மௌலவி முஹம்மத் காஸிம் நானூத்தவி தமது தஹ்தீருன்னாஸ் பக்கம் 4ல்... 'பெருமானாருக்கு முன்னோர், பின்னோர் அனைவரின் இல்மும் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே நபிகளார் இறைவனிடமிருந்து நேரடியாக இல்மைப் பெற்றுக் கொண்ட 'ஆலிமே ஹகீகி' ஆவார்கள். மற்ற நபிமார், வலிமார்கள் அன்னாரிடமிருந்து இல்மைப் பெற்றுக் கொள்பவர்கள்.'

ஆக நாயகத்திற்கு முன்னோரின் இல்ம் இருப்பதை காசிம் நானூத்தவி உறுதி செய்துள்ளார்.

முன்னோர் என்பதில் நபி ஆதம் முதல் ஈஸா வரையுள்ள நபிமார்கள் எல்லாம், மலக்குகள் எல்லாம், லவ்ஹுல் மஹ்பூலின் பொறுப்பிலுள்ள மலக்குகள் உட்பட அர்ஷை சுமக்கும் வானோர் உட்பட அனைவரும் சேர்ந்து விடுகின்றனர்.

**அறிவுசார் ஆதாரங்கள்.**

·இல்மை வைத்தே அந்தஸ்து நிர்ணயிக்கப்படுகிறது. இல்மை வைத்தே ஆதம் நபியை மலக்குகளை விட உயர்த்தி சஜ்தா செய்யப்பட வைத்தான் இறைவன். எனவே நாயகம் எல்லா படைப்புகளையும் விட, எல்லா நபிமார்களையும் சிறந்தவர்கள் எனில் இல்மிலும் அனைவரையும் அதிகம் பெற்றிருக்க வேண்டியது அவசியமாகிறது.

·அமலில் அதிகம் இல்லாவிட்டாலும் ஒரு நபி தமது உம்மத்தை விட இல்மில் அதிகம் பெற்றிருக்க வேண்டும் என்பதை தஹ்தீரூன்னாஸில் மவ்லவி காசிம் நானுத்தவியே எழுதியுள்ளார். 'அகிலத்தாரை எச்சரிப்பதற்காக உம்மை நபியாக அனுப்பினோம் என அல்லாஹ் தன்னை தவிர உள்ள அனைவரையும் மலக்குகள் உட்பட நாயகத்தைப் பின்பற்றுபவர்களா – நாயகத்தை அனைவருக்கும் இமாமாக ஆக்கி விட்டான். எனவே அனைவரையும் விட நாயகத்திற்கு இல்மும் அதிகமிருக்க வேண்டியது கட்டாயம்.

·கொஞ்சகாலம் நல்ல உஸ்தாதின் மேற்பார்வையிலிருந்தாலே ஒரு மாணவர் நிறைய கற்றுக் கொள்ள முடியும் என்னும் போது முதன் முதலில் படைக்கப்பட்டு இறைவனது மேற்பார்வைக்குள்ளேயே இருந்து இறுதியாக அனுப்பப்பட்ட நபிகள் கோமானின் கல்வி ஞானம் ஏனையோரை விட அதிகம் தானே இருக்க வேண்டும்!

·மாணவனின் இல்முக் குறைபாட்டிற்கு அவனது அறிவுக் குறைபாடோ அல்லது உஸ்தாதின் அறிவுக் குறைபாடோ அல்லது உஸ்தாதின், மாணவரின் சோம்பேறித் தனமோ அல்லது உஸ்தாதின் கஞ்சத்தனமோ காரணமாகலாம். அல்லாஹ்வுக்கும், ரஸூலுக்கும் எந்தக் குறையுமில்லை என்னும்போது அல்லாஹ் ரசூலுக்கு கற்பித்த கல்வியில் எப்படிக் குறை காண முடியும்?

·அல்லாஹ் லவ்ஹுல் மஹ்பூலில் அனைத்தையும் ஏன் எழுதி வைக்க வேண்டும்? ஒன்று மறதி ஏற்பட்டு விடுமென்று எழுதலாம். அல்லது மற்றவருக்கு காட்ட வேண்டி எழுதலாம். அல்லாஹ் மறதி என்னும் குறையை விட்டு பரிசுத்தமானவன். அவ்வாறெனில் நாயகத்தை விட அல்லாஹ் வேறு யாரை நேசித்து அவருக்கு லவ்ஹுல் மஹ்பூலைக் காட்டப் போகிறான்?

·கைபு எனும் மறைஞான ரகசியங்களில் மிக ரகசியமானது இறைவனது தாத் என்னும் உள்ளமை. நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் பார்க்க வேண்டியதற்கு لن ترانی பார்க்க முடியாது என்று மறுத்த இறைவன் நாயகத்தின் எவ்வளவு காதல் இருந்திருந்தால் அந்த அதியற்புத

www.sufimanzil.org

ரகசியத்தைக் காட்ட மிஃராஜை அளித்திருப்பான். படைத்தவனின் தாத்தை அறிந்தவர்களுக்கு படைப்புகளின் ஙைபை அறிதல் பெரிய விஷயமா என்ன?

·ஷைத்தானின் பார்வையை விட்டு உலகில் யாரும் மறைந்திருக்க முடியாது. வழி கெடுக்கும் ஷைத்தானுக்கும் ஷைத்தானுக்கு இவ்வளவு இல்மெனில் வழிகொடுக்கும் நாயகத்திற்கு…?

·அல்லாஹ் நாயகத்தை يا ايه النبى செய்தி அறிவிக்கக் கூடியவர்களே! என்றழைத்தான். இதற்கு வெளிப்படையான செய்திதான் என்று கருத்துக் கொண்டால் ஒவ்வொரு அறிஞனும் நபி என்றாகிவிடாதா? நமக்கும் நபிக்கும் என்ன வித்தியாசம். ஆக நபியெனில் மறைவானவற்றை அறிவிக்கக் கூடியவர்கள் என்றே பொருள்.

**மறுப்போரின் வாதமும் ஏற்போரின் பதிலும்.**

**வாதம்:** அல்லாஹ் கூறுகிறான்…

قُلْ لَا اَقُوْلُ عِنْدِى خَزَائِن اللهِ وَلاَ اَعْلَمُ الْغَيْبَ

நபியே கூறுங்கள். என்னிடம் அல்லாஹ்வின் பொக்கிஷங்கள் உண்டென்றோ, நான் ஙைப் எனும் மறைவானவற்றை அறிவதாகவோ நான் கூறவில்லை.

**பதில்:** அதாவது நாயகமே! ஙைப் என்னும் மறைவானவற்றை சுயமாக நான் அறியவில்லை. எனக்கு என் ரப்பு கற்றுக் கொடுத்திருக்கிறான் என்று கூறுங்கள்.- தப்ஸீர் நைஷாப்பூரி.

எனக்கு வஹி வராமல் நான் ஙைபை அறிய மாட்டேன் என்பதாகும்.- பைளாவி.

அனைத்தையும் நான் அறியவில்லை.- கபீர்.

பணிவை வெளிப்படுத்தும் முகமாகச் சொல்லப்பட்டதாகும். –தப்ஸீர் காஜின்.

ஒன்று… ரப்புக்குமுன் மனிதன் என்னம் நிலையில் பணிவை மேற்கொள்ளும் விதமாக சொல்லப்பட்டது. அவ்வாறில்லையெனில் பெருமானார் அர்ஷ் முதல் புவியின் கடைசிவரையுள்ள எல்லா படைப்புகளையும் விடச் சிறந்தவர்கள் என்றோ இரண்டாவது இங்கு இல்லை எனக் கூறும்படி சொன்னது இல்ம் இருக்கிறது என வாதிடுவதைத் தான். இல்மையே இல்லை எனக் கூறுவதற்கில்லை. –தப்ஸீர் அராயிசுல் பயான்.

நான் அனைத்திலும் ஆற்றல் பெற்றவன் என்றோ, அனைத்தையும் அறிபவன் என்றோ வாதம் செய்யவில்லை என்பது பொருள். –நைஷாப்பூரி.

மேற்படி விளக்கங்களுடன் இன்னும் ரூஹுல் பயானில்… நபிகளார் ஙைகை அறியவில்லை என்றொருவர் கூறினால் அவர் கூற்று தவறாகும் என்றும் வந்துள்ளது.

தப்ஸீர் மதாரிகிலும் வாதிடுவதையே இல்லை என கூறும்படி அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான் என்றுள்ளது.

அதாவது... என்னிடம் அல்லாஹ்வின் பொக்கிஷங்கள் உண்டு தான். இறைவனளித்த இல்முன் ளைபும் உண்டுதான். அதற்காக நான் ஒன்றும் மலக் இல்லை. மனிதன்தான். இறைவனின் அடிமை நான். ஆகவே அதையெல்லாம் உள்ளது என்று கூறி பெருமை பேசித் திரியமாட்டேன் என்பது விளக்கமாகும்.

மிஷ்காத்துடைய ஹதீதுأُوْتِيْتَ مَفَاتِيْحَ خَزَائِنَ الْاَرْضِ  பூமியின் பொக்கிஷங்களின் திறவுகோல்கள் எனக்கு வழங்கப்பட்டுள்ளன. இல்முல் ளைப் கொடுக்கப்பட்டதற்கான ஆதாரங்களை முன்பே நிறைய சமர்ப்பிக்கப்பட்டு விட்டது.

பொதுவாக இல்முல் ளைப் இல்லை என இந்த ஆயத்தின் வெளிப்படையான கருத்தை வைத்துக் கூறினால் நாம் முன்பு வைத்த பல திருமறை ஆயத்துகள், சஹீஹ் ஹதீதுகளை மறுக்க நேரிடும்.

وَلَوْ كُنْتَ اَعْلَمُ الْغَيْبَ لَاَسْتَكْثَرْتَ مِنَ الْخَيْرُ

ளைப் என்னும் மறைவானதை நான் அறிந்திருந்தால் நலவுகளில் நின்றும் நிறைய சேர்த்திருப்பேன்.

**பதில்:** இதற்கு தப்ஸீர் விரிவுரையாளர்கள் மூன்று விளக்கமளிக்கின்றனர். 1. இது பணிவை வெளிப்படுத்தும் முகமாகச் சொல்லப்பட்டது. 2. அனைத்து மறைவான ஞானங்களையும் அறிவதை மறுப்பதாகும். 3. சுயமாக அறிவதில்லை என்பது கருத்தாகும்.

·مَنْ يُؤْتَ الْحِكْمَةَ فَقَدْ أُتِيَ خَيْرًا كَثِيْرًا என்ற வசனத்தில் தன் ரசூலுக்கு அல்லாஹ் ளைபை வழங்குவதை உறுதிப்படுத்தியிருப்பதால் மேற்கண்ட வசனத்தின் கருத்து ரசூல் சுயமாக அறிந்து கொள்வதில்லை என்பதே. –நஸீமுர் ரியாழ்.

·அனைத்து ளைபுகளையுமே அறிந்திருக்க வேண்டுமென்பது நபிக்கு கட்டாயமில்லை. எனவே ளைபு எனும் முழு மொத்தத்தையும் நான் அறியவில்லை என்பது பொருள். அல்லது இவ்வாசகம் பணிவின் அடிப்படையில் கூறப்பட்டதாகும். - ஷரஹ் மவாகிப்.

·நாயகத்திற்கு எல்லாம்தானே கற்பிக்கப்பட்;;டது என்று நீ கேட்டால் இது பணிவிற்காக சொல்லப்பட்டதாகும். –ஜலாலைன் ஹாஷியா ஷாதீ.

·நபிகளார் ளைபான பல விஷயங்களை அறிவித்திருப்பது சஹீஹான ஹதீதுகளில் வந்திருக்க அத்தோடு அவை நபியின் மிகப் பெரிய அற்புதங்களிலுள்ளதும் கூட. எவ்வாறு இந்த ஆயத்திற்கும், ஹதீதிற்கும் இடையில் இணைத்து விள்ககம் பெறுவது? நான் சொல்கிறேன்: இவ்வசன வாசகம் பணிவு. ஒழுக்கத்தின் அடிப்படையில் அமைந்ததாகும். அதாவது அல்லாஹ் அறிவித்தால்தான் என்னால் ளைபை அறிய முடியும். இன்றேல் நானும் அறிய மாட்டேன் என்பதாகும். அல்லது அல்லாஹ் ளைபுகளை பெருமானாருக்கு அறிவித்துக் கொடுக்கும் முன் இவ்வசனம் அருளப்பட்டிருக்கலாம். –தப்ஸீர் காஜின்.

·என்னால் சுயமாக அறிய முடிந்திருந்தால் நான் நிறைய நன்மைகளை சேமித்திருப்பேன் என்பதே பொருள். – தப்ஸீர் சாவி.

·مَنْ يُؤْتَ الْحِكْمَةَ فَقَدْ أُوتِىَ كَثِيْرًا ஹிக்மத் எனும் ஞானம் வழங்கப்பட்டவர் அதிக நலவுகள் வழங்கப்பட்டவர் என்ற வசனம إِنَّا أَعْطَيْنَكَ الْكَوْثَرَ; நிச்சயமாக நாம் உமக்கு كَوْثَر எனும் நீர்த்தடாகத்தை அல்லது அதிகமான நலவுகளை வழங்கியுள்ளோம் என்ற வசனமும் நாயகத்திற்கு அதிக நலவுகள் வழங்கப்பட்டுள்ளதை உறுதி செய்கிறது.

·ரூஹுல் பயானில் இவ்வசனத்தின் கீழ் வந்துள்ளது. சில மஷாயிக்குமார்கள் நபியவர்கள் கியாமநான் எப்போது? என்பதையும் அறிந்துள்ளனர் எனக் கூறியுள்ளனர். ஆனால் அக்கூற்று இந்த வசனத்திற்கு முரணாகாது.

وَعِنْدَهُ مَفَاتِحُ الْغَيْبِ لَايَعْلَمُهَا اِلَّا هُوَ

னைப் என்னும் மறைவான ஞானத்தின் திறவு கோல்கள் அவனிடமே உள்ளன. அதை அவனையன்றி எவரும் அறிய மாட்டார்.

னைபின் திறவு கோல்கள் என்பதற்கு அல்லாஹ்வின் முழுமையான இல்மை அறிதல் அல்லது மறைந்து இருப்பதை வெளிக் கொண்டு வருதல் அதாவது படைக்க சக்தி பெறுதல் என்ற விளக்கத்தையே அநேக தப்ஸீர்கள் கூறுகின்றன. ஏனெனில் சாவியின் வேலை பூட்டைத் திறத்தல். அப்போதுதான் வெளியிலிருப்பதை உள்ளேயோ, உள்ளிருப்பதை வெளியேயோ கொண்டு வர முடியும். அதுபோல னைபின் சாவி னைப் எனும் மறைவானவற்றைத் திறந்து (உதாரணத்திற்கு மறைந்திருக்கும் படைப்புகளைப் படைத்து)

வெளிக் கொணர்வது,. இது அல்லாஹ்வின் ஆற்றலால் மட்டுமே நிகழ முடிந்ததாகும்.

·அல்லாஹ் மட்டுமே முழுக்க முழுக்க அனைத்து னைபுகளையும் அறிபவன் என்பதையே இவ்வாசகம் விளக்குகிறது. இன்னொரு வகையில் எல்லா படைப்புக்களின் மீதும் சக்தியுடையவன் அல்லாஹ் மட்டுமே என்பதை அறிவிப்பதாகும். – தப்ஸீர் காஜின், தப்ஸீர் கபீர்.

·மறைவாக உள்ள படைப்புகளை அதன் உருவை, இறைவனது நாட்டம் எனும் பேனாவை வரைந்து இறைவனால் மட்டுமே படைப்புகளை உருவாக்க முடியும். அந்த ரகசியத்தை, மறைவை திறக்கும் சாவியான அந்தப் பேனா இறைவன் வசமே உள்ளது. - ரூஹுல் பயான்.

·இறைவனிடமுள்ள அந்த சாவியை இறைவனைத் தவிர, இறைவனிடமிருந்து அறிநது கொண்ட அவனது ஹபீபைத் தவிர, அவனது கலீலைத் தவிர வேறெவரும் அறியமாட்டார். – அராயிசுல் பயான்.

·னைபின் சாவியை அவனிடமே உள்ளது என்பதன் அர்த்தம் னைபான (இல்முகள், படைப்புகள்) எல்லாம் அதன் துவக்கம் எப்படி இருந்தது என்பதை யாரும் அறியவில்லை என்பதாம். – தப்சீர் இனாயத் காழி.

ஆக இறைவனது மறைவான ஞானங்கள் எவராலும் திருடப்பட முடியாத இடத்தில் பத்திரமாக உள்ளது. அதன் சாவிகள் அல்லாஹ்விடமே உள்ளன. அல்லாஹ் நாடியபோது அதனைத் திறந்து தான் நாடியவர்களுக்கு அதிலிருந்து ஞானத்தை வழங்குகிறான். எவருக்கும் வழங்காமல், திறக்காமல் இருப்பதற்கு பூட்டி வைக்க வேண்டிய தேவைகளோ, சாவிகளோ தேவையில்லை .

أُوْتِيْتَ مَفَاتِيْحَ خَزَائِنَ الْاَرْضِ

எனக்கு பூமியின் பொக்கிஷங்களின் சாவிகள் வழங்கப்பட்டுள்ளது என்று ஹதீது வந்துள்ளதை வைத்துப் பார்க்கும் போது –நாயகத்திற்கு சாவியும் வழங்கப்பட்டுள்ளது. அது பயன்படுத்தப்பட்டும் இருக்கிறது என்பது தெரிய வருகிறது.

قُلْ لاَ يَعْلَمُ مَنْ فِى الَّسموتِ وَالْاَرْضِ الْغَيْبَ اِلاَّ الله

நபியே கூறுங்கள்! வானங்களிலும், பூமியிலுமுள்ள கைப் எனும் மறைவானவற்றை அல்லாஹ்வைத் தவிர யாரும் அறிய மாட்டர் என்று.

இதற்கு முன்பு பார்த்த வசனங்களுக்கு சொன்ன விளக்கங்களையே தப்சீர்கள் இதற்கும் சொல்கின்றன. அதாவது ஒன்று சுயமாக அறிதல். இரண்டாவது முழுமையாக அறிதல். இவ்விரண்டும் அல்லாஹ்விற்கே சொந்தமான விஷயங்களாகும். நபிமார்கள், வலிமார்கள் கைபை அறிந்து, அறிவித்திருக்கிறார்களே? என்ற கேள்விக்கு இமாம் நபவி ... 'அவர்கள் சுயமாக அறிந்து கொள்ளவில்லை. அவர்களுக்கு அல்லாஹ் அறிவித்தான்' என்று பதிலளித்துள்ளனர்.

இமாம் நபவியின் பத்வாவை இமாம் இப்னு ஹஜர் மக்கி ஆமோதித்துள்ளனர்.

இது போன்ற வசனங்களுக்கு இவ்வாறான மேதைகளின் விளக்கத்தை ஏற்காமல் பொதுவாக இல்முல் கைப் இல்லை என்று வெளிப்படையான இது போன்ற ஒரு சில வசனங்களின் கருத்துக்களை மட்டும் வைத்துக் கூறினால்... அது மறுப்பவர்களுக்கே எதிராகப் போய்விடும். ஏனெனில் ரசூல்மார்களுக்கு சில இல்முல் கைப் வழங்கப்படுவதை அவர்களும் ஏற்கின்றனர். ஆனால் இவ்வசனங்கள் பொதுவாக ஒட்டுமொத்தமாக இல்முல் கைப் இல்லை என்று அறிவிக்கிறது. அத்துடன் நாம் மேற்குறிப்பிட்ட பல வசனங்களை மறுக்க நேரிடும்.

இவ்வளவு ஏன் اِنِ الْحُكْمُ اِلَّا لله தீர்ப்பு அல்லாஹ்வுக்கே சொந்தம்

لَهُ مافِي السَمَوٰتِ وَمَافِى الْاَرْضِ வானங்கள், பூமியிலுள்ளவை அல்லாஹ்விற்கே உரியன وَكَفٰى بِا لله شَهِيْدًا சாட்சியாளனாக அல்லாஹ் போதுமானவன்.

وَكَفى بِاللهِ وَكِيْلًا வக்கீலாக இருக்க அல்லாஹ்வே போதுமானவன்.

وَكَفٰى بِاللهِ حَسِيْبًا கணக்கு வாங்கிடுபவனாக அல்லாஹ்வே போதுமானவன் என்பன போன்ற வசனங்களின் வெளிப்படையான கருத்தை மட்டும் எடுத்தால் யாரையும் அரசராக, ஆட்சியாளராக ஏற்க முடியாது. எவரும் எப்பொருளையும் சொந்தங் கொண்டாட முடியாது

(குர்ஆனிலுள்ள மீராசுச் சட்டமெல்லாம் தேவையில்லை என்றாகி விடும்) எவரது சாட்சியையும் ஏற்க முடியாது (திருமணத்திற்கு சாட்சிகள் அவசியம் எனும் மார்க்க சட்டமே வீண் என்றாகி விடும்) எந்த விசயத்திற்கும் யாரையும் வசீலாக்க முடியாது. யாரும், யாரிடமும் எந்த கணக்கையும் கேட்க முடியாது.

ஆக இவற்றின் பொருள்.... 'இவைகள் எல்லாம் இறைவனுக்குரியது தான். இறைவன் தான் நாடியவர்களுக்கு தான் நாடியதை தன்னிடமிருந்து வழங்குகிறான்' என்பதே.

وَمَا عَلَّمْنَاهُ الشِّعْرَ وَمَايَنْبَغِى لَهُ

மேலும் நாம் நபிகளாருக்கு கவிகளை கற்பிக்கவுமில்லை. அது அவர்களுக்கு தகுதியானதுமில்லை.

மறை விரிவுரையாளர்கள் இதற்கு மூன்று விதமாக விளக்கமளித்துள்ளனர்.

1.நாம் அவர்களுக்கு கவி புனையும் ஆற்றலளிக்கவில்லை.

2.பொய்யையோ, கற்பனையையோ கலந்து பேசும் கவியை கற்பிக்கவில்லை.

3.கவி போன்ற பொதுவாக எல்லோராலும் விளங்க முடியாத – புலமை கொண்டோர் மட்டுமே விளங்கிக் கொள்ள முடிந்த - மூடலான பேச்சுக்களை நாம் கற்பிக்கவில்லை. நாம் கற்பித்த குர்ஆன், ஹதீது تَفْصِيْلُ لِكُلِّ شَيْئٍ ஒவ்வொன்றையும் விரிவாக விளக்கக் கூடியது என்பதாகும்.

·நபிகளார் கவிதை பேசவில்லை. எனினும் நல்ல கெட்ட கவிகளை தரம் பிரிப்பதை அறிந்தே உள்ளனர்.- ரூஹுல் பயான்.

மக்கா காபிர்கள் நாயகத்தை பொய்க் கவி புரியும் கவிஞர் என்றும் கற்பனையில் தேர்ந்த புலவர் என்றும் விமர்சித்ததற்கு - இட்டுக் கட்டியதற்கு பதில் கூறும் முகமாக இவ்வசனம் அருளப்பட்டது. அதனால்தான் இவ்வசன தொடர்ச்சியில் இது கவியோ, கற்பனையோ அல்ல. நபி கவிஞரோ, புலவரோ அல்ல மாறாக اِنْ هُوَ اِلَّا ذِكْرٌ وَقُرْاٰنٌ مُبِيْنٌ இது திக்ராகவும், தெளிவான குர்ஆனாகவுமே உள்ளது என்ற வாசகமுள்ளது.

இதே விளக்கம் தப்ஸீர் காஜினும் அளிக்கிறது.

مِنْهُمْ مَنْ قَصَصْنَا عَلَيْكَ وَ مِنْهُمْ مَنْ لَمْ نَقْصُصْ عَلَيْكَ

நபிமார்களில் சிலரின் வரலாற்றை உமக்கு சொல்லியிருக்கிறோம். சிலரது வரலாற்றைச் சொல்லவில்லை. இதற்கு விரிவுரையாளர்கள்:- குர்ஆனில் ஜிப்ரீலின் வஹி மூலம் எல்லா நபிமார்களின் வரலாற்றையும் நாம் கூறவில்லை.

சுருக்கமாக எல்லா நபிமார்களையும் பொதுவாக சுட்டப்பட்டிருந்தாலும் விரிவாக அனைவரின் வரலாற்றையும் குர்ஆனில் கூறப்படவில்லை.

மாறாக ஜிப்ரயீல் மூலமல்லாத மறைமுக வஹியில் தான் எல்லோரின் வரலாறும் கூறப்பட்டுள்ளதே தவிர வெளிப்படையான ஜிப்ரீலின் வஹி மூலம் குர்ஆனில் கூறப்படவில்லை என்பது கருத்தாகும் என்று எழுதியுள்ளனர்.

நாயகம் துன்யாவை விட்டு மறையும் முன்பே எல்லா நபிமார்களின் வரலாறுகளும் தெளிவாக அவர்களுக்கு அறிவித்துக் கொடுக்கப்பட்டது. அவர்களின் நூர் - ஒளியிலிருந்து படைக்கப்பட்ட மேலும் மிஃராஜில் அனைவரையும் சந்தித்த நாயகமவர்களுக்கு அவர்களது வரலாறுகள் தெரியாதென்றால் எப்படி?

திருமறையில் அவ்வரலாறுகள் விடப்பட்டதன் நோக்கம் உம்மத்தின் மீது திருமறை சிரமமாகி விடக் கூடாதென்பதால்தான். –சாவி

இதே விளக்கத்தை மிஷ்காத் ஷரஹ் (விரிவுரை) மிர்காத்தும் பதிவு செய்கிறது.

يَوْمَ يَجْمَعُ اللهُ الَرسُوْلَ فَيَقُوْلُ مَاذَا أُجِبْتُمْ قَالُوا لاَ عِلْمَ لَنَا اِنَّكَ اَنْتَ عَلَّامُ الْغُيُوْبِ

அல்லாஹ் (தன்) ரசூல்மார்களை ஒன்று கூட்டும் நாளில் (நீங்கள் மக்களிடம் தீனை எத்தி வைத்த போது) என்ன பதிலளிக்கப்பட்டீர்கள் என்று கேட்பான். (அதற்கவர்கள்) எங்களுக்கு எந்த இல்மும் இல்லை. நிச்சயமாக நீயே மறைவானவைகளை நன்கறிந்தவன் என்று கூறுவார்கள்.

இதற்கு முபஸ்ஸிரீன்களின் விளக்கம்:- இறைவா! நீயே நன்கறிந்தவன். உனக்கு நிகராக எங்களுக்கு இல்ம் இல்லை. மேலும் மரியாதை, பணிவுடன் அப்படிக் கூறுவர். மூன்றாவது:- கியாமநாளில் அனைவரும் சஞ்சலத்துடன் نفس நப்ஸி நப்ஸி என தன் நப்ஸையே சிந்திக்கும் வேளையில் இவ்வாறு கூறும் ரசூல்மார்கள் பிறகு தாங்கள் சரியாக தப்லீக் செய்ததாகக் கூறுவர். அதற்கு காபிர்கள் மறுப்புத் தெரிவிப்பர். பின்பு சாட்சிகள் , விசாரணைகள் தொடரும்.

·அவர்களிடம் இல்ம் இருந்தாலும் அல்லாஹ்வின் இல்முக்கு முன் இல்லாதது போன்றுதானே. அதனால்தான் எங்களுக்கு எந்த இல்மும் இல்லை என்று கூறுவர். – தப்ஸீர் காஜின், மதாரிக், பைளாவி.

·இறைவன் இல்மை, நீதத்தை, சரியான தீர்ப்பை நன்கறிந்துள்ளமையால் ரசூல்மார்கள் தங்களது இல்மைக் கொண்டோ, பேச்சாலோ, விளக்கத்தாலோ எதுவுமில்லை- எதுவும் தேவையில்லை என்பதால் பணிவுடன் அவ்வாறு கூறிவிடுவர். – கபீர்.

·கியாமநாளின் ஒரு கட்டத்தில் இவ்வாறும், மறுசமயம் தப்லீக் செய்ததற்கான விளக்கம் கூறியும் ரசூல்மார்கள் பேசுவார்கள். - ரூஹுல் பயான்.

وَمَا اَدْرِى مَايُفْعَلُ بِى وَلَا بِكُمْ

என்னை என்ன செய்யப்படும் என்றும் நானறியவில்லை. உங்களை என்ன செய்யப்படும் என்பதையும் நான் அறியவில்லை.

கியாமநாளின் தன் நிலையையும் நாயகம் அறியவில்லை. தன் உம்மத்தின் நிலையையும் அறியவில்லை. அவ்வாறிருக்க கியாம நாளில் அவர்கள் நமக்கு என்ன செய்திட முடியும்?

இதற்கு முபஸ்ஸிரீன்கள் இரண்டு பதிலளித்துள்ளனர். ஒன்று... எனக்கு இறைவன் அறிவித்துக் கொடுக்காமல் என்னால் சுயமாக என் நிலையைக் கூட அறிய முடியாது. அவ்வாறிருக்க சுயமாக உங்கள் நிலையை எவ்வாறு அறிய முடியும்? என்பதாகும்.

**இரண்டாவது:** இவ்வசனம் கியாமநாளின் நிலைகளை நாயகத்திற்கு அறிவித்துத் தரும்முன் அருளப்பட்டது.

·நாயகம் விடைபெறும் முன்பே அல்லாஹ் தனது மறையின் மூலம், வஹி மூலம் இவ்வுலகிலும், மறுமையிலும் முஃமின்கள், காபிர்கள் அனைவரின் நிலையும் என்னவாகும் என்பதை அறிவித்துக் கொடுத்து விட்டான். – தப்சீர் சாவி.

இவ்வசனம் اِنَّا فَتَحْنَا لَكَ فَتْحًا مُبِيْنًا (நிச்சயமாக நாம் உமக்கு தெளிவான வெற்றியளித்தோம்) என்ற வசனம் மூலம் சட்ட மாற்றம் செய்யப்பட்டு விட்டது. – முல்லா அப்துர் ரஹ்மான்.

·மேற்கண்ட வசனம் இறங்கிய போது முஷ்ரிக்குகளுக்கெல்லாம் கொண்டாட்டமாகப் போய் விட்டது. லாத், உஜ்ஜா மீதாணை! நாமும், முஹம்மதும் ஒன்றே! அவருக்கும் அவரது மறுமை நிலை தெரியாது. நமக்கும் நமது நிலை தெரியாது என்று பேசலாயினர். அப்போது இறைவன்:-

لِيَغْفِرَ لَكَ اللهُ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِكَ وَمَا تَأَخَّرَ

அல்லாஹ் உமது முன்,பின் பாவமன்னிப்பை ஏற்பதற்காக என்ற வசனத்தை அருளினான். இதில் சந்தோஷமடைந்த சஹாபாக்கள் அல்லாஹ்வின் நபியே தங்களுக்கு சோபனம். உங்களின் நிலையை நீங்கள் அறிந்து கொண்டீர்கள் என்று மகிழ்ந்து கூறிய 'யாரஸூலல்லாஹ் எங்களின் நிலை என்னவாகும்? என்று கேட்டனர். அப்போது அல்லாஹ் لِيُدْخِلَ الْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ جَنّٰتٍ முஃமின்களான ஆண்களையும், பெண்களையும் அல்லாஹ் சுவனபதியில் நுழைவிப்பதற்காக என்ற வசனத்தை இறக்கினான். மேலும் முஃமின்களுக்கு அல்லாஹ்வின் மிகப் பெரும் கிருபையுண்டு என்று பொருள்படும் وَبَشِّرِ الْمُؤْمِنِيْنَ بِاَنَّ لَهُمْ مِنَ اللهِ فَضْلًا كَبِيْرًا எனும் வசனத்தையும் இறக்கினான் என ஹழ்ரத் அனஸ், கதாதா, இக்ரிமா ரலியல்லாஹு அன்ஹும் கூறினர். மேலும் அவர்கள் கூறினர், தன் நிலை அறியவில்லை எனும் மேற்கண்ட வசனம் முன்பு இறங்கியது. நாயகத்தின் நிலையும், முஃமின்களின் நிலையும் ஜெயம் என்ற வசனம் பின்பு இறங்கியது. ஆகவே முந்திய வசனத்தின் சட்டம் இல்லை. –தப்ஸீர் காஜின்.

அத்துடன் அவ்வசன சட்டம் இல்லை என்பதை மறுத்து அவ்வசன கருத்து உண்மையென்றால்: நாம் காட்டிய ஆதார ஆயத்துக்களை மறுக்க நேரிடுவதோடு பல சஹீஹான ஹதீதுகளையும் மறுக்க நேரிடும். நபிகளார் கூறியுள்ளனர்:-

கியாம நாளில் லிவாவுல் ஹம்து கொடி என்னிடமிருக்கும். மக்கள் என் கொடிக்கு கீழ் இருப்பர். மிகப்பெரிய பரிந்துரை நான் புரியக் கூடியதாகும். எனது கவ்சர் இவ்வளவு

தூரமிருக்கும். நட்சத்திரங்களின் எண்ணிக்கை போல (கணக்கிட முடியாத) அதன் கோப்பைகள் இருக்கும். 10 சஹாபிகளின் சுவன சோபனம். சுவன தலைவி பாத்திமா ரலியல்லாஹு அன்ஹா போன்றவை

لَاتَعْلَمَهُمْ نَحْنُ نَعْلَمُهُمْ

மு.ஃமின்களை நீர் அறிய மாட்டீர். நாமே அவர்களை அறிவோம்.

தங்களது கணக்கு வரும் முனாபிக்குகளைக் கூட அறியா நபியால் இல்முல் கைப் எப்படி சாத்தியம்?

**மறை விரிவுரையாளர்களின் விளக்கம்:-**

இவ்வசனம் பின்வரும் வசனம் மூலம் சட்ட மாற்றம் செய்யப்பட்டு விட்;டது.

وَلَوْ نَشَاءُ لَاَرَيْنٰكَهُمْ فَلَعَرَفْتَهُمْ بِسِيْمٰهُمْ وَلَتَعْرِفَنَّهُمْ فِى لَحْنِ الْقَوْلِ وَاللهُ يَعْلَمُ اَعْمَالَكَمْ

நாம் நாடினால் அவர்களை உமக்கு நாம் காண்பிப்போம். அவர்களுடைய (முக) அடையாளங்களைக் கொண்டு அவர்களை நீர் அறிந்து கொள்வீர். இன்னும் (உண்மையை மறைத்துப் பேசும் அவர்களின்) பேச்சின் தொனியிலும் நிச்சயமாக அவர்களை நீர் அறிந்து கொள்வீர். அல்லாஹ் உங்களுடைய செயல்களை அறிவான்.

இவ்வசனம் இறங்கிய பின் எந்த முறையில் நாயகத்திடம் (வந்தாலும்) பேசினாலும் அவனை நாயகம் அறியாமலிருக்கவில்லை. –தப்சீர் ஜமல்.

மேலும் ஹதீதுகளும் உறுதி செய்கிறது.

புகாரி விரிவுரை ஐனியில் இப்னு மஸ்ஊதின் ரிவாயத்:- 'ஜும்ஆ நாளன்று குத்பா சமயம் சிலரைச் சுட்டிக் காட்டி நீ முனாபிக். நீ வெளியேறி விடென்று சிலரை (பள்ளியை விட்டு) வெளியே அனுப்பி விட்டனர்.

ஷரஹ் ஷபாவில் இப்னு அப்பாஸின் ரிவாயத்:-

முனாபிக்குகளின் ஆண்கள் 300 பேர்களும் பெண்கள் 170 பேர்களுமிருந்தனர்.

எனக்கு என் உம்மத்தினர் காட்டப்பட்டனர். அவர்களின் மு.ஃமின்கள், காபிர்கள், முனாபிக்குகள் அனைவரையும் நானறிந்து கொண்டேன் என்ற ஹதீதே முன்பே பதிவு செய்து இருக்கிறோம்.

وَيَسْئَلُوْنَكَ عَنِ الرُّوْحِ قُلِ الرُّوْحِ مِنْ اَمْرِ رَبِّى وَمَا اُوْتِيْتُمْ مِنَ الْعِلْمِ اِلَّا قَلِيْلًا.

மேலும் ரூஹைப் பற்றி உம்மிடம் கேட்கின்றனர். ரூஹ் எனது ரப்பின் கட்டளையிலுள்ளதாகும். அதைப் பற்றிய அறிவிலிருந்து சிறிதளவே தவிர நீங்கள் கொடுக்கப்படவில்லை என்று கூறுவீராக.

இதை வைத்து நாயகத்துக்கு ரூஹ் பற்றிய இல்ம் இல்லை என்கின்றனர். ஆனால்.... இவ்வசனத்தில் ரூஹ் பற்றிய இல்ம் தங்களுக்கு வழங்கப்படவில்லை என்றோ, அல்லது ரூஹ் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என சொல்லி விடுங்கள் என்றோ கூறப்படவில்லை. ஆகவே இவ்வாசகத்தை வைத்து ரூஹ் பற்றிய இல்ம் இல்லை என்ற முடிவுக்கு வர முடியாது. மேலும் இது காபிர்களின் கேள்விக்கு சொல்லப்பட்ட பதிலாகும்.

அதாவது காபிர்களே! உங்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவு குறைவு. உங்களில் ரூஹ் பற்றியெல்லாம் விளங்கிக் கொள்ள முடி யாது என்பதாகும் என்ற இப்னு அரபியின் கருத்தை ஸைப் சஷ்தியாயீ எனும் கிரந்தத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

·நபியவர்கள் மிஃராஜ் அன்று ஆலமுல் அனாசிரிலிருநது ஆலமுத்தப்யிய்யத் கடந்து, பின் ஆலமுல் அர்வாஹ் கடந்து, ஆலமுல் அர்வாஹ் அடைந்து அதையும் கடந்து இறைவனை அவனது முழு தாத்துடன் தரிசித்தனர். -ரூஹுல் பயான்.

·இங்கு ரூஹ் எனில் குர்ஆன் அல்லது ஜிப்ரீல் என்பதாகும். எனவே அதற்கு எனது ரப்பின் கட்டளை என்று கூறிவிடுங்கள். அதைப் பற்றி அவர்கள் அதிகம் குறுக்குக் கேள்விகள் கேட்கும் முன்பே உங்களுக்கு அதைப் பற்றிய இல்ம் குறைவு என்று கூறிவிடுங்கள். –கபீர்.

இறைவனையே அறிபவர்களுக்கு இறைப் படைப்பான ரூஹை அறிவது பெரிய விஷயமல்ல.

·ரூஹைப் பற்றி நபிமார்கள் அறிந்திருக்க வேண்டியதும், ஆனாலும் அதனை பகிரங்கப்படுத்தக் கூடாது என்பதும் நபித்துவத்தின் அடையாளமாகும். – தப்ஸீர் காஜின்.

·ரூஹ் படைப்பா? என்ற ரீதியில்தான் அவர்களது கேள்வி. அதற்கு ஆம். அது என் ரப்பின் செயல்படுத்தப்படும் பல காரியங்களில் ஒன்று என்பது பதிலானது. – மதாரிக்.

இறைவனது தாத், சிபாத், முன்னோர், பின்னோரின் இல்ம் ஞானம் வழங்கப்பட்ட நபி ரூஹின் இல்ம் அறியவில்லை என்பது எவ்வளவு பெரிய மடமை. – மதாரிஜுன் நுபுவ்வா.

·நாயகத்திற்கு ரூஹுடைய இல்ம் இல்லை என்று கூறாதீர்கள். ஏனெனில் தன்னை அறியார் தன் ரப்பை எப்படி அறிய முடியும்? ரூஹின் இல்ம் சில அவ்லியாக்கள், உலமாக்களுக்கும் கூட உள்ளது. - இஹ்யாவில் இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹு அன்ஹு.

يَسْئَلُوْنَكَ عَنِ السَّاعَةِ اَيَّانَ مُرْسٰهَا؟ فِيْمَ اَنْتَ مِنْ ذِكْرَهَا

கியாமநாள் எப்போதென உம்மிடம் கேட்கின்றனர். அதைக் கூறுவதற்கு நீர் எதிலிருக்கிறீர்?

இவ்வசனத்தை வைத்து பெருமானாருக்கு கியாமநாள் எப்போதென தெரியாது என்று எண்ணுகின்றனர். ஆனால் உண்மையில் கியாமநாள் எப்போதென்ற இல்ம் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

**மறை விரிவுரையாளர்களின் விளக்கங்கள்:**

·இவ்வசனம் கியாமநாளின் இல்ம் வழங்கப்படும் முன் அருளப்பட்டது. கேட்பவர்களுக்கு பதிலளிக்கக் கூடாது என்பதே நோக்கம். இவ்வசன வாசகத்தில் இடம்பெறும ; اَنْتَ مِنْ ذِكْرَهَا என்பதன் அர்த்தம் நீர் அந்த கியாமநாளின் அடையாளமாக, அது நெருங்கி விட்டதற்கு விளக்கமாக உள்ளீர்.

•மேலும் இதைச் சொல்வதற்காக நாம் தங்களை ரசூலாக அனுப்பவில்லை என்பதாகும்.

-தப்சீர் சாவி, ரூஹுல் பயான், காஜின், மதாரிக்.

மேலும் மதாரிக்கில்:- காபிர்களின் கேள்வி இரண்டு.

1. கியாமநாள் பற்றி இவ்வளவு கூறுகிறீர்களே அது என்று நிகழும் என்றும் கூறுங்கள். மேலும் فِيْمَ اَنْتَ مِنْ ذِكْرٰهَا இவ்வாறு விளக்கமும் உங்களுக்கு எப்படி எங்கிருந்து கிடைக்கிறது? அதற்கு அடுத்த வசனம் பதில் கூறுகிறது اِلٰى رَبِّكَ مُنْتَهٰهَا அதன் முடிவு என் ரப்பளவில். அதாவது முடிவு நாளை என் ரப்பு அறிவித்துத் தரச் சொன்னால் மட்டுமே நான் அறிவித்துத் தர முடியும். அவ்வாறே எனக்கு அதன் விளக்கங்களும் என் ரப்பிடமிருந்தே வழங்கப்படுகிறது.... என்று விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

மேலும் அதே மதாரிக்கில் அடுத்த வசனத்திற்கு வரும் விளக்கத்தில் இன்னும் தெளிவாக اِنَّمَا اَنْتَ مُنْذِرٌ நீர் அதனை அஞ்சி நடப்பவருக்கு எச்சரிக்கை செய்பவரே. அதன் நாளை அறிவித்துக் கொடுப்பது உம் வேலையுமல்ல என்று வந்துள்ளது.

يَسْئَلُوْنَكَ كَاَنَ◌َكَ خَفِيٌّ عَنْهَا قُلْ اِنَّمَا عِلْمُهَا عِنْدَ اللّٰهِ

நீர் அதனை நன்கறிபவரைப் போல (க் கருதி) உம்மிடம் வினவுகின்றனர். கூறுவீராக! அதன் இல்ம் அல்லாஹ்விடமே(உள்ளது)

நபிகளாருக்கு கியாம நாளின் இல்ம் என்பதற்கு இவ்வசனத்தையும் ஆதாரப்படுத்துகின்றனர். இதற்கு இரண்டு பதில்... 1. மறைவான இல்மை நீங்களே சுயமாக நன்கு அறிந்து கொள்வதாகக் கருதி உம்மிடம் கேட்கின்றனர். ஆனால் அது அல்லாஹ்விடமே உண்டு. அல்லாஹ் நாடியதால் தான் தங்களுக்கே அதன் இல்மை வழங்கினான். இல்லாவிட்டால் தங்களுக்கே இல்ம் ஏது? என இல்முக்கு சொந்தக்காரன் தான்தான் என பறைசாற்றுகிறானே தவிர அதன் இல்மை நாயகத்திற்கு வழங்கவில்லை என்று கூறவில்லை.

இரண்டாவது இவ்வசனம் நாயகத்திற்கு கியாமநாள் இல்ம் தரப்படும் முன் அருளப்பட்டதாகும்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் உலகை விட்டு மறையும் போது துன்யா, ஆகிரத்தின் மறைவான ஞானங்களனைத்தும் வழங்கப்பட்டிருந்தனர். ஏன் துன்யா, ஆகிரத், சுவர்;க்கம், நரகம் அனைத்தையும் தமது உள்ளங்கையைக் காண்பது போல கண்டனர் என்பதை

ஹதீதுகள் ஊர்ஜிதப்படுத்தியுள்ளன. எனினும் சில விசயங்களை வெளிப்படுத்தக் கூடாது என கட்டளையிடப்பட்டிருந்தனர் என்பதை ஈமான் கொள்வது வாஜிப். – சாவி.

وَمَا يَعْلَمُ تَأْوِيْلِهِ اِلَّا اللهِ

முதஷாபிஹான ஆயத்துக்களின் விளக்கத்தை அல்லாஹ்வையன்றி எவரும் அறிய மாட்டார்.

இவ்வசனத்தை வைத்து அந்த விளக்கம் பெருமானாருக்கு இல்லை என்று ஆதாரம் பிடிக்கின்றனர்.

ஆனால் அவை பெருமானாருக்கு வழங்கப்படவில்லை என்பதற்கு என்ன ஆதாரமிருக்கிறது? அதுமட்டுமல்ல அதன் விளக்கத்தை சில அவ்லியாக்கள், உலமா(க்களுமே அறிகின்றனர். எனவே தான் ஷாபியாக்கள் இவ்வசனத்தை ஓதும் போது,

وَالرَّاسِخُوْنَ فِى الْعِلْمِ எனுமிடத்தில் (நிறுத்தல், வக்ஃப் குறியிட்டு) நிறுத்துகிறார்கள். அவ்வாறு நிறுத்துகையில் அவ்வசன பொருளாவது:-

அதன் விளக்கத்தை அல்லாஹ்வைத் தவிர, இன்னும் கல்வியில் உறுதி-தேர்ச்சியுடையவர்களைத் தவிர வேறெவரும் அறிய மாட்டார் என்பதாகும்.

إِنَّ اللَّهَ عِندَهُ عِلْمُ السَّاعَةِ وَيُنَزِّلُ الْغَيْثَ وَيَعْلَمُ مَا فِي الْأَرْحَامِ ۖ وَمَا تَدْرِي نَفْسٌ مَّاذَا تَكْسِبُ غَدًا ۖ وَمَا تَدْرِي نَفْسٌ بِأَيِّ أَرْضٍ تَمُوتُ ۚ إِنَّ اللَّهَ عَلِيمٌ خَبِيرٌ

நிச்சயமாக அல்லாஹ் அவனிடம் தான் கியாம நாளின் ஞானமிருக்கிறது. அவன் மழையை இறக்கி வைக்கிறான். கர்ப்பங்களில் உள்ளவற்றையும் அவன் அறிகிறான். எந்த ஆத்மாவும் நாளை அது என்ன சம்பாதிக்கும் என்பதை அறிய முடியாது. எந்த ஆத்மாவும் அது எந்த பூமியில் மரணமடையும் என்பதையும் அறிய முடியாது. நிச்சயமாக அல்லாஹ் முற்றும் அறிந்தவன். (செய்திகள் அனைத்தையும்) நன்கு அறிகிறவன்.

இவ்வைந்து விஷயங்களை அல்லாஹ்வைத் தவிர யாரும் அறிய முடியாது. அப்படி வேறெவரும் அறிவதாகக் கூறினால் அவர் முஷ்ரிக் (அல்லாஹ்விற்கு இணை வைத்தவர்) என்கின்றனர். இதை உறுதிப்படுத்த மிஷ்காத்துடைய ஹதீது ஒன்றையும் கூறுகின்றனர். 'ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் கியாம நாளைப் பற்றி வினவிய போது – அதற்கு நபிகள்.... அவ்வைந்தை அல்லாஹ்வையன்றி யாரும் அறிய மாட்டார் என்று கூறி மேற்கண்ட வசனத்தை ஓதிக் காட்டினார்கள் என்பதாகும்.

முதலில் இவ்வசனத்திற்கு திருமறை விரிவுரையாளர்களின் விளக்கத்தையும், பின்பு இந்த ஹதீதிற்கு ஹதீது விளக்கவுரையாளர்களின் விரிவுரையையும் காண்போம். பின்பு படிப்பவர்களே விளங்கி முடிவு செய்யட்டும்.

·இவ்வைந்தை அல்லாஹ்வையன்றி யாரும் அறியார் என்று கூற வேண்டியது உம் பொறுப்பாகும். ஆனாலும் அதை அல்லாஹ் தான் தேர்வு செய்தவர்களுக்கு அதைக்

கற்பிக்கலாம். அதற்கு ஆதாரம் அவ்வசனத்தின் முடிவான إِنَّ اللهَ عَلِيْمٌ خَبِيْرٌ அல்லாஹ் நன்கறிந்தவன். செய்திகளை அறிவிக்கக் கூடியவன் என்பதாகும். –அஹ்மதிய்யா.

·யாரும் சுயமாக அறிய முடியாது தான். ஆனாலும் அல்லாஹ் தன் மறையின் பல வசனங்களில் கூறுவது போல தான் நாடிய நபிமார்களுக்கு, வலிமார்களுக்கு, நல்லோர்களுக்கு அறிவித்துக் கொடுத்தால் அதை யார் தடுப்பார்? எனவேதான் உலமாக்கள் கூறுகின்றனர் நமது நபி இவ்வுலகை விட்டு மறையும் போது இவ்வைந்தையும் அறிந்திருந்தனர். – தப்சீர் சாவி.

·சில வலிமார்கள் கர்ப்பத்தில் இருப்பது ஆணா? பெண்ணா? என்றறிவித்ததை நான் கேள்விப்பட்டுள்ளேன். பார்த்துள்ளேன். – தப்ஸீர் அராயிசுல் பயான்.

·நபிமார், வலிமார்களிடமிருந்து மறைவான செய்திகள் அறிவிக்கப்பட்டதாக கூறப்பட்டவையெல்லாம் ஒன்று வஹி மூலம்அல்லது இல்ஹாமின் மூலம் அல்லது கஷ்ப் எனும் ஞான உதிப்பின் மூலமே. அவ்வாறே சில வலிகள் மழை வருவது பற்றியும், கர்ப்பத்தில் இருப்பது ஆணா? பெண்ணா? என்பது பற்றியும் அறிவித்துள்ளனர். அவர்கள் அறிவித்தது நடந்துள்ளது. -ரூஹுல் பயான்.

மறுப்பாளர்கள் ஆதாரப்படுத்திய அந்த மிஷ்காத்தின் ஹதீதின் கீழ்… ஹதீது விளக்கவுரையாளர்களான பிரபலமான இமாம் குர்துபி, இமாம் ஜனி, இமாம் கஸ்தலானி, முல்லா அலீ காரி போன்றோர் எழுதுகிறார்கள்.:

'யார் இவ்வைந்தில் ஒன்றை நாயகத்தின் மூலமாக அல்லாது சுயமாக தாம் அறிந்து கொண்டதாகச் சொன்னால் அவர் பொய்யர்'.

ஆக நாயகம் மூலம் மற்றவர்களும் அறிய முடியும் எனும் போது நாயகம் அறிவது வெளிச்சம்.

·அதாவது அல்லாஹ் கற்பிக்காமல் அறிய முடியாது என்பதே கருத்தாகும். – லம்ஆத்.

·வஹி, இல்ஹாம் மூலமே அறிய முடியும். சுயமாக தம் சொந்த அறிவால் அறியமுடியாது. – அஷ்அத்துல்லம்ஆத்.

·கியாம நாள் எப்போதென அல்லாஹ்வைத் தவிர யாரும் அறியார். மேலும் அல்லாஹ் தான் விரும்பும் ரசூலுக்கு அதை அறிவிக்கிறான். அந்த ரசூலிடமிருந்து வலி அறிந்து கொள்கிறார்.- இமாம் கஸ்தலானி

·ஹழ்ரத் அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு தன் மனைவி பின்த் காரிஜா ஒரு பெண் பிள்ளையைக் கருவுற்றிருப்பதாக தன் மனைவியிடம் கூறினார்கள். அவ்வாறே அவர்களது வபாத்திற்குப் பிறகு உம்முகுல்தூம் பிறந்தனர். -இப்னு மாஜாவின் ஓரக் குறிப்பு அன்ஜாஹுல் ஹாஜா.

·பெருமானாரின் உம்மத்திலுள்ள ஏழு குத்புமார்களும் இவ்வைந்து விசயங்களையும் அறிகின்றனர் என்னும் போது குத்பை விட உயர் அந்தஸ்திலுள்ள கவ்தின் இல்மை,

அனைவரையும் விட மிக மிக உயர்ந்த தகுதியிலுள்ள நாயகத்தின் இல்மை விளக்க வேண்டுமா?

-கிதாபுல் இப்ரீஜில் சய்யித் ஷரீப் அப்துல் அஜீஸ்.

·நாயகத்தின் உம்மத்திலேயே தான் எப்போது மரணமடைவோம்? என்பதை, கர்ப்பத்தில் என்ன உண்டு? என்பதை அறியக் கூடிய பலரை நாம் பார்த்துள்ளோம். – அல்லாமா ஜலாலுத்தீன் சுயூத்தி ரஹ்மத்துல்லாஹி அலைஹி.

·இவ்வைந்தையும் அறிவித்துத் தராமல் அல்லாஹ் நாயகத்தை மறையச் செய்யவில்லை. – அல்லாமா இப்றாஹீம் ஹைஜூரி, அல்லாமா ஷன்ஷாயீ.

·எனினும் சிலதை வெளிப்படுத்தாதிருக்கும்படி நபியவர்களுக்கு அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான். –புதூஹாத் வஹ்பிய்யா.

·ஷைக் இப்னு ஹஜர் மக்கி அவர்களின் தந்தைக்கு பிறக்கும் குழந்தைகள் தொடர்ந்து மரணித்து வர அவர்கள் கவலையுடன் ஷைக் அவர்களிடம் வர கவலைப்படாதே! தனது கல்வியால் இந்த உலகத்தை நிரப்பி விடும் ஒரு பெரும் கல்வி மான் உனக்கு பிறப்பாள் என்று கூறினர். –புஸ்தானில் ஷாஹ் அப்துல் அஜீஸ்.

நபிகளாருக்கு எல்லா படைப்புகளையும் விட அதிக இல்ம் வழங்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக் கொள்ளும் மறுப்பாளர்கள் கண்டிப்பாக இவ்வைந்தின் இல்மும் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ளதை ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

குழந்தை கர்ப்பத்தில் இருக்கும்போது 4 கலிமாக்களை- வார்த்தைகளை- கொடுத்து அல்லாஹ் ஒரு மலக்கை அனுப்புகிறான். அவர் வந்து அக்குழந்தையின் 1. அமல் 2. மவ்த் 3. ரிஜ்க் 4. அது நல்லவனா? தீயவனா? ஆகிய நான்கையும் எழுதி பின்பு அதில் ரூஹை ஊதுகிறார். –(மிஷ்காத்). ஆக இவ்வைந்தையும் அவ்வானவர் அறிகிறார்.

மிஷ்காத்தில் இன்னொரு ஹதீது:... அல்லாஹ் படைப்புகளின் தக்தீரை –விதியை வானவர்கள், பூமி படைக்கப்படுவதற்கு 50,000 ஆண்டுகளுக்கு முன்பே (லவ்ஹுல் மஹ்பூலில்) எழுதி விட்டான்.

இவ்வைந்தும் அதிலிருக்கிறது. லவ்ஹுல் மஹ்பூலின் இல்ம் அதன் பொறுப்பிலுள்ள வானவர்களுக்கும் இருக்கிறது எனில் நாயகத்திற்கு?

·மீதாக் நாளில் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமுக்கு முஃமின்களின் ரூஹ்கள் வெள்ளை நிறத்திலும், காபிர்களின் ரூஹ்கள் கருப்பாகவும் காட்டப்பட்டது. – மிஷ்காத்.

·மிஃராஜ் நாளில் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் வலப்புறம் வெண் நிற முஃமின்களின் ஆன்மாவைக் கண்டு சந்தோஷித்த நாயகம் இடப்புறம் கருப்பு நிறத்திலிருந்த காபிர்களின் ரூஹ்களைக் கண்டு கவலை அடைந்தனர்.

·நாயகம் தமது வலக்கரத்தில் ஒரு ஏட்டையும், இடக்கத்தில் ஒரு ஏட்டையும் வைத்து வலக்கர ஏட்டில் சுவனவாதிகளின் பெயர்களும், இடக்கர ஏட்டில் நரகவாதிகளின் பெயர்களுமிருப்பதாகக் கூறினர். – மிஷ்காத்.

·கப்ரில் மனிதன் பதில் கூறியபின் முன்கர், நகீர் கூறுவார்களாம் قد كنا نعلم انك تقول لهذا நீ இதைத்தான் சொல்வாய் என்று (முன்பே) எங்களுக்குத் தெரியும். –மிஷ்காத்.

நல்லோர், தீயோரை முன்பே அறிந்துள்ள முன்கர் நகீர்கள் கேள்வி கேட்பது ஒரு முறைக்காகத்தான்.

·நல்ல மனிதரிடம் அவர் மனைவி சண்டையிட்டால் சுவனத்திலுள்ள அவருக்குச் சொந்தமான ஹூர் கண்ணி கூறுவாராம்... கொஞ்ச நாள் உன்னிடம் விருந்தாளி. பிறகு நிரந்தரமாக என் விருந்தாளி. அவரிடம் சண்டையிடாதே! (மிஷ்காத் கிதாபுன் நிகாஹ்)

·பத்ர் தினங்களில் ஒரு நாள் யார் யார் எந்த இடத்தில் மரணிப்பார் என்று நாயகம் கூறியதை நாம் முன்பே எடுத்துக் காட்டியுள்ளோம்.

இதிலிருந்து தெரிய வருவது இதுதான்... இவ்வைந்து மறைவானவற்றின் இல்ம் நாயகத்திற்கு மட்டுமல்லாது அல்லாஹ் இன்னும் பல நல்லடியார்களுக்கு வழங்கியுள்ளான்.

**மறுப்பாளர்கள் ஆதாரப்படுத்தும் ஹதீதுகளின் விளக்கம்.**

பொதுவாக அல்லாஹ் எனக்கு இந்த இல்மைக் கொடுக்கவில்லை என நாயகம் கூறும் எந்த சஹீஹான ஹதீதையும் ஆதாரப்படுத்த முடியுமா? மறுப்பாளர்கள். அல்லாஹ்வே அறிந்தவன். அல்லாஹ் மிக அறிந்தவன் என்று கூறக் கூடிய அல்லது பதில் கூறிய நாயகம் மௌனம் காக்கக் கூடிய நிலையைக் கொண்டுள்ள ஹதீதுகளை எடுத்துக் கொண்டு ரசூலுல்லாஹ்வுக்கே தெரியல. அதனால்தான் இப்படி சொல்கிறார்கள் என்று வாதிடுகின்றனர். எத்தனையோ பல விஷயங்கள் அவர்கள் கேள்வி வைத்தும் அடியார்களின் நன்மைக்காக மறைத்து வைக்கப்பட்டுள்ளது. அதற்காக நபி அறியவில்லை என்று பொருளாகாது.

ஏன் எத்தனையோ விஷயங்களை அல்லாஹ் வானோரிடம் கேட்கிறான். அதற்காக இறைவனுக்கு இல்மில்லை என்பதால் கேட்கிறான் என்று கருத்துக் கொள்ள முடியுமா?

நாம் இது சம்பந்தமாக நிறைய தெளிவான ஆதாரங்களையும், பதில்களையும் சமர்ப்பித்து இருக்கிறோம். இருந்தாலும் அவர்கள் கூறும் ஹதீதுகளுக்கு ஹதீது விரிவுரைகள் என்ன இருக்கிறது என்பதை சுருக்கமாக முன்வைக்கிறோம்.

பத்ர் வெற்றியின் போது சிறுமிகள் தப் அடித்து وفينا نبی یعلم مَا فی غد எங்களது நபி நாளையை அறிவார்கள் என்று பாடலிசைத்தனர். அப்போது நாயகம் இதைப் பாட வேண்டாம். முன்பு பாடியதையே பாடுங்கள் என்றனர். –மிஷ்காத்.

**கேள்வி:** அவர்கள் பாடியது சரியெனில் ஏன் தடை செய்ய வேண்டும்?

www.sufimanzil.org

**பதில்:** அது பாடல் வரி மட்டுமல்ல. கொள்கை வரி. அது தவறு என்றால் அதை வன்மையாக கண்டித்து மெய் கொள்கை எது என்பதை தெளிவு படுத்தியிருக்க வேண்டும். ஆனால் அதை செய்யவில்லை. இதிலிருந்து அந்தப் பாடல் வரி-கொள்கை வரி சரியே என்பது நிரூபணமாகிறது. சரி ஏன் அவர்கள் அவ்வரியைப் பாட வேண்டாம் என்று கூற வேண்டும்? என்றால், தன் முன் தான் புகழப்படுவதை விரும்பாததால். இது அன்னாரின் பணிவை பறை சாற்றுகிறது. இரண்டாவது பாடி மகிழும் வேளையில் தம்மை பற்றி பேசப்படல் கண்ணியமல்ல என்பதால். மூன்றாவது அல்லாஹ் அறிவிக்கிறான், கற்பித்தான் என்றில்லாமல் தான் அறிவதாக தன்னை மட்டுமே குறிப்பிட்டதால். நான்காவது பத்ரில் இறந்தவர்களுக்கு இரங்கற்பா பாடுகையில் தம்மை புகழ்வது போன்ற வரிகள் தவிர்க்கப்படல் வேண்டும் என்பதற்காக என நான்கு காரணங்களை மேதைகள் எழுதுகிறார்கள்.

இதையே மிஷ்காத் விரிவுரை மிர்காத், அஷ்அத்துல் லம்ஆத் பதிவு செய்கிறது.

மதீனாவில் அன்சாரிகள் இனச் சேர்க்கை முறையில் மரங்களை நட்டனர். அதை நாயகம் தடுக்க, கை விட்டனர். அல்லாஹ்வுடைய நாட்டம் விளைச்சல் குறைந்து விட்டது. இதை நபியிடம் முறையிட انتُم اعلم بامور دنياكم உங்களின் உலக காரியங்களை நீங்களே நன்கு அறிவீர்கள் என்று கூறினர். உலக காரியங்களை அவர்களின் அளவிற்கு நாயகம் தெரியவில்லை என்பதைத்தானே இது காட்டுகிறது!

**பதில்:** பெருமானாரின் இச்செயல் கோபத்தின், அதிருப்தியின் வெளிப்பாடாகும். நாயக கட்டளையில் பொறுமை காக்காது சறுக்கல் ஏற்பட்டதும் உடனே முறையிட்டதில் அதிருப்தியுற்ற நபிகளார், இவ்வாறு கூறியுள்ளனர். (நாமே அதிருப்தியில் , கோபத்தில் கூறுவதுண்டு எனக்கு ஒன்றும் தெரியாதுதாங்க. ஒங்களுக்குத் தாங்க எல்லாம் தெரியும். நம்மல ஆளவிடுங்க)

·ஷைக் ஷனூஸி கூறினர்: மரங்களின் இனச் சேர்க்கை முறையில்தான் விளைச்சல் ஏற்படுகிறது என்ற அவர்களின் கோட்பாட்டை விளைவிப்பவன் இறைவன். ஆகவே எப்படி இருந்தாலும், அச்சேர்க்கை முறைப்படி நடாவிட்டாலும் இறைவன் விளைவிப்பான் எனும் நம்பிக்கையை உள்ளத்தில் வேறூன்றச் செய்யவே நாயகம் தடை செய்தனர்.

முதல் முறை இறைவனின் சோதனை வர பொறுமை கொள்ள முடியவில்லை. மாறாக அவர்கள் பொறுத்திருந்தால் தங்கள் உழைப்பின் (நாயக வாக்கின்) பலனை கேட்டிருப்பார்கள். -ஷரஹ் ஷபா.

·அவர்கள் பொறுத்திருந்தால் பின் லாபமடைந்திருப்பர். இனச் சேர்க்கை முறை நடலின் சிரமம் நீங்கியிருக்கும். –முல்லா அலீ காரி ஷரஹ் ஷபா.

·பெருமானார் இப்படிக் கூறினாலும் வானம், பூமியில் எந்த ஒரு சின்னஞ்சிறிய விசயமும் அவர்கள் அறியாமலில்லை.- அல்லாமா கைலானி, பஸ்லுல் கிதாப்.

·அதற்கு முன்பு விவசாயம் செய்திராத ஹஜ்ரத் யூசுப் நபி அலைஹிஸ்ஸலாம் எகிப்தில் வரப்போகும் பஞ்ச காலத்தை எ வ்வாறு விவசாயம் செய்து, தானியங்களைப் பத்தி;ரப் படுத்தி, விநியோகம் செய்திட வேண்டும் என்பதை அறியவில்லையா? செய்யவில்லையா? என்ன யூசுப் நபியின் இல்ம் கூட நாயகத்திற்கு இல்லையா? நஊதுபில்லாஹ்.

திர்மிதியில் வருகிறது, நாயகம் இறைவனைக் கண்டார்கள் அல்லது ஏதொன்றையும் மறைத்தார்கள். நபிகள் நாளைய விசயங்களை அறிவார்கள் என எவர் கூறினாரோ அவர் அல்லாஹ்வின் மீது பொய்யை இட்டுக் கட்டி விட்டார்.

**பதில்:** ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அறிவித்துள்ள இந்த மூன்றும் அவர்களின் சொந்தக் கருத்தாகும். நபிகளார் அறியாததாகக் கூறவில்லை. மேலும் தம கருத்துக்கு சில ஆயத்துக்களை ஆதாரமாகக் காட்டுகின்றனர்.

ஆனால் நாயகம் இறைவனை தரிசித்தனர் என்பதற்கு இப்னு அப்பாஸின் ஹதீது உள்ளது. இதை பெரும்பான்மை முஸ்லிம்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

நாயகம் எதையும் மறைக்கவில்லை என்பது மெய்தான். மக்களுக்குத்தேவையான தீன், துன்யாவுடைய சட்டங்கள், கோட்பாடுகள், வழிகாட்டல்களில் எதையும் மறைக்கவில்லைதான். ஆனால் மக்களின் நன்மை கருதி சில இறை ரகசியங்களை வெளிப்படுத்தவில்லை.

மிஷ்காத், இல்ம் பாடத்தில் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹுஅவர்களின் ரிவாயத்:

எனக்கு நாயகத்திடமிருந்து இரு வகை இல்ம் கிடைத்தது. ஒன்றை நான் எத்தி வைத்து விட்டேன். இன்னொரு வகை உண்டு. அதைச் சொன்னால் நீங்கள் என்னை கொன்று போட்டு விடுவீர்கள்.

ஆக இறைரகசியங்களின் ரகசியம் காக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே நாயகம் நாளைய விசயங்களை அறியவில்லை என்பதும் சுயமாக அறியவில்லை என்தேயாகும். இதைப் பற்றி நாம் முன்பே போதுமான அளவு விளக்கிக் கூறியிருக்கிறோம்.

ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா மீது இட்டுக்கட்ட போது நாயகம் எந்த கருத்தும் கூறாது மௌனத்தைக் கடைபிடித்தனர். நாயகம் அறியவில்லை. எனவே மௌனித்தனர் என்கின்றனர்.

**பதில்:** மௌனம் அறியாமையில் அல்ல. இறை தீர்ப்புக்கான பொறுமை, எனினும் நாயகம் மூடலாக தம் கருத்தை வெளியிட்டனர். என் மனைவிமார்களில் நான் இது போன்ற தீங்கை கண்டதில்லை என்று.

உலகையே உள்ளங்கை போலக் கண்டவர்கள் தம் உன்னத மனைவியை அறியாரோ?

மிஷ்காத்தில் ஹவ்ள், ஷபாஅத் பாடத்தில்.... மறுமையில் சிலர் என்னிடம் வருவர். அவர்களை நானறிவேன். அவர்களும் என்னை அறிவர். பின் எங்களுக்கிடையில் திரையிடப்படும்.

அப்போது நான் அவர்கள் நானறிந்தேன் என்பேன். அப்போது... அவர்கள் உங்களுக்குப் பின் புதிது, புதிதாக என்னென்ன செய்தார்கள் என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள் என்று கூறப்படும். உடனே நான் அவர்களை தூரமாகுங்கள் தூரமாகுங்கள் என்பேன்.

நாயக காலத்திற்குப் பின் முர்தத் ஆனவர்களை நாயகம் அறியவில்லையே?

**பதில்:** அவர்களை இழித்துரைக்கும் நோக்கில்தான் பெருமானார் நம் தோழர்கள் என்பார்கள். இல்லாவிட்டால் அவர்களை மலக்குகள் இவ்வளவு தூரம் வரவே விட மாட்டார்கள். குர்ஆனில் வருகிறதுذُقْ اِنَّكَ اَنْتَ الْعَزِيْزِ الْكَرِيْمِ நரகவாதிகளைப் பார்த்து,... நரகத்தை சுவைப்பாயாக. நீதான் கண்ணியவான். சங்கையாளன் என இழிவுபடுத்தும் விதமாக சொல்லப்படும்.

சரி இன்று அவர்களை அறிவதாகச் சொல்லும் நாயகம் நாளை மறந்து விடுவார்களா என்ன? முஃமின்களின் கியாம நாள் அடையாளத்தை நாயகம் இந்தளவு கூறியுள்ளனர். அதை வைத்து சாதாரணமானவர்கள் கூட முஃமின்களை அடையாளம் கண்டு கொள்ள முடியும். அல்லாஹ்வும் மறையில் அவர்களது முகம் கருப்பாக இருக்கும் என்கிறான். காபிர்கள் என்ன என்ன கேவல கோலத்தில் வருவார்கள் என்பதை நாயகம் விரிவாகக் கூறியுமுள்ளனர்.

சொன்னவர்களாலேயே அடையாளங்களை காண முடியாதா?

يُعْرِفُ الْمُجْرِمُوْنَ بِسِيْمٰهُمْபாவிகள் அவர்களது அடையாளங்களைக் கொண்டு அறியப்படுவர்.

சாதாரணமாக அனைவரும் அறிந்து கொள்ள முடிந்ததைக் கூட நாயகம் அறியமாட்டார்களா? (நஊதுபில்லாஹி மின்ஹா)

புகாரி ஜனாஸா பாடத்தில் உம்முல் அளாவின் ரிவாயத் والله ما ادرى وانا رسول الله مايفعل ﷺரசூலுல்லாஹ்வாக உள்ள நானே என் நிலை என்னவாகும் என்று அறியேன்.

**பதில்:** இதை முன்பே திருமறை வசன விளக்கத்தில் தெளிவுப்படுத்தி விட்டோம். ... சுருக்கமாக:- தான் சுயமாக அறிந்து கொள்ள முடியாது என்ற கருத்தில் நாயகம் கூறியுள்ளனர்.

·ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் மீது இட்டுக்கட்ட போது நாயகம் சஞ்சலத்துடன் காணப்பட்டனர். –புகாரி.

பரிசுத்தமான தம் மனைவியின் மீதே இட்டுக்கட்டுப்பட்ட விட்டதே எனும் சஞ்சலமே தவிர அறியாமை அல்ல.

·நாயகத்திற்கு விஷம் கொடுக்கப்பட்ட போது அதை அறியவில்லையா? அல்லது அறிந்தும் கண்டார்களா?

**பதில்:** அறிந்தனர். எனினும் அல்லாஹ்வின் விருப்பம் என்பதையும் அது மரணம் தராது என்பதையும், தமது கடைசி நேரத்தில் அதன் விளைவான் ஷஹாதத் பதவியை அடைந்து கொள்வதையும் விரும்பினர்.

·இல்முல் கைப் இருந்திருந்தால் பீர்மஊனிவில் முனாபிக்குகளால் 70 சஹாபாக்கள் ஷஹீதை தடுத்திருக்கலாம்தானே?

70 சஹாபாக்கள் ஷஹீதுகளின் அந்தஸ்தைப் பெற வேண்டுமென்ற இறைவனது விருப்பம். எனவே அனைத்தையும் அறிந்தும் நாயகம் தடுக்கவில்லை.

உங்கள் கருத்துப்படி நபிக்கு இல்மில்லை என்றே வைத்துக் கொள்வோம். அல்லாஹ்வுக்குத் தெரியும்தானே? வஹி அறிவித்துத் தடுத்திருக்கலாம்தானே!

**இல்முல் கைபுக்கு எதிராக அறிஞர்கள் கூறியுள்ளது என்ன?**

·ஒரு ஆணும், பெண்ணும் அல்லாஹ் ரசூல் சாட்சியாக நிகாஹ் செய்து கொண்டோம் என்று கூற மக்கள் கூறினர்...இது குப்ரான பேச்சு. ஏனெனில் அவர் நாயகம் கைகை அறிவதாகச் சொல்லி விட்டார். ஆனால் நபிகளார் ஜீவிய காலத்திலேயே மறைவானதை அறியவில்லை. இப்போது எப்படி அறிவார்? – பதாவா காழீகானில்.

·வான், பூமியிலுள்ள கைபை அல்லாஹ்வையன்றி யாரும் அறிய மாட்டார் எனும் வசனத்திற்கெதிராக யாராவது நபிகளார் கைபை அறிகின்றனர் என்று கூறினால் அவர் காபிர் என ஹனபிகள் கூறியுள்ளனர். -ஷரஹ் பிக்ஹு அக்பரில் முல்லா அலீ காரி.

இவ்விரண்டு வாசகமும் பெருமானாருக்கு இல்முல் கைப் உள்ளது என்பது குப்ர் என்கிறது.

**பதில்:** உண்மையை சொன்னால் மறுப்பாளர்களும் சில கைபுகள் நபிக்கு உண்டென ஒப்புக் கொண்டுள்ளனர். அவ்வாறாயின் அவர்களும் காபிர்கள் என்றாகும். மவ்லவி அஷ்ரப் அலி தானவி குழந்தைகள், பைத்தியக்காரர்களுக்கும் சில இல்முல் கைப் உள்ளதென ஹிப்ளுல் ஈமானில் கூறுகிறார். மவ்லவி கலீல் அஹ்மது அம்பேட்டவி பராஹீனே காத்திஆவில் ஷைத்தான், மலக்குல் மவ்த்துக்கு விசாலமான இல்முல் கைப் இருப்பதாகச் சொல்கிறார். மௌலவி காசிம் சாஹிப் தஹ்தீருன்னாஸில் பெருமானாரின் இல்ம் எல்லா படைப்புகளையும் விட அதிகம் என உறுதி கூறுகிறார். இப்ப சொல்லுங்க. உங்கள் கருத்துப்படி நீங்களும்....

அவ்வாசகத்தை கவனிப்போம். காழீகானில் இதை தம் கருத்தாகக் கூறவில்லை. மாறாக மக்கள் கூறினர் என்றே எழுதியுள்ளார்.

பொதுவாக காழீகான் போன்றவர்கள் தாம் ஏற்காத ஒரு கருத்தை எழுத வேண்டிய நிர்ப்பந்தம் வந்தால் (நான் கூற வில்லை எனக் கூறாமல் மக்கள் கூறினர் என்று எழுதி விடுவர் என்பதை குனியத்துல் முஸ்தம்லீ எனும் நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

துர் முக்தாரில் மேற்படி நிகாஹ் செய்து அல்லாஹ் ரசூல் சாட்சி என்று கூறினால் அவன் காபிராகி விடுவார் என்று வந்துள்ளது.

அதன் கீழ் ஷாமீ தாதார்கானியாவின் கருத்தை கூறுகிறார்கள்: அவன் காபிராக மாட்டான். ஏனெனில் உம்மத்தின் செயல்கள் நாயகத்திடம் எடுத்துக் காட்டப்படுவதை சஹீஹான ஹதீதுகள் உறுதி செய்துள்ளது.

சுயமாக வஹி மூலமோ, இல்ஹாம் மூலமோ அல்லாமல் நபிகள் இல்முல் கைபை அறிகின்றனர் என்றால் தான் அவன் காபிராவான். ஏனெனில் அது குர்ஆனுக்கு எதிரான கொள்கை.-ஷாமி.

அவர் காபிராக மாட்டார் ஏனெனில் நபிமார்களுக்கு எல்லா விசயங்களும் எடுத்துக் காட்டப்படுகிறது. (இறைவஹி, இல்ஹாம் மூலம்) அவர்கள் கைபுகளை அறிகின்றனர். – கன்ஜூத்தகாயிகின் விரிவுரை மஃதனுல் ஹகாயிக், கஜனதுர் ரிவாயாத்.

முல்லா அலீ காரியின் முழுவாசகம் இது... அறிந்து கொள். நபிமார்கள் சுயமாக கைபுகளை அறிவதில்லை. அல்லாஹ் அறிவித்துத் தருகிறான். யார் இதை சுயமாக நபி அறிகிறார்கள் என்று கூறுகிறார்களோ அவர்கள் காபிர்கள் என ஹனபிகள் கூறியுள்ளனர்.

ஆக எந்த அறிஞரும் சுயமாக இல்முல் கைபுண்டு என்றாலே காபிர் என்று கூறியுள்ளனர். நாம் மீண்டும் கூறுவது இதுதான். நாயகத்தின் இல்முல் கைப் அல்லாஹ் வழங்கியதே!!!

**இல்முல் கைப் மறுப்பினரின் அறிவுப்பூர்வமான கேள்விகளுக்கு பதில்கள்.**

·இல்முல் கைப் இறைவனின் தன்மை. அதில் யாரையும் கூட்டாக்குவது ஷிர்க்- இணை வைப்பாகும்.

**பதில்:** கைபு எனும் மறைவானதை அறிதல் மட்டுமல்ல வெளிப்படையானதை அறிவதும் தம்மைعَالم الغيب والشهادة மறைவானதையும், வெளிப்படையானதையும் அறியக் கூடியவன், ஏன் அல்லாஹ் தன்னை மறையில் சமீஃ, பஷீர் - கேட்பவன், பார்ப்பவன் என்றும் குறிப்பிடுகிறனர். ஆகவே அவையெல்லாம் இறைவனின் தன்மை. மனிதர்களுக்கு உள்ளதென்று கூறினால் ஷிர்க்காகும் என்று கூற முடியுமா?

வித்தியாசம் என்னவெனில் இறைவனது அத் தன்மைகள் நீக்கமற நிறைந்தது. நிலையானது, இறைவன் சுயமாகப் பெற்றுக் கொண்டது தன்மைகள். ஆனால் மற்ற படைப்புகளுக்குள்ள அத்தன்மைகள் இறைவனால் இடையில் வழங்கப்பட்டது. நிலைத்தன்மையற்றது.

கேள்வி:- நபிகளாருக்கு இல்முல் கைப் கிடைத்தது என்றால் எப்போது? மிஃராஜில் கிடைத்ததாகச் சொல்கிறீர்கள். கனவில் இறைவனைத் தரிசித்த போது கிடைத்ததாகச் சொல்கிறீர்கள். குர்ஆன் மூலம் கிடைத்ததாக சொல்கிறீர்கள். எதுதான் சரி?

பதில்: நபியெனில் ஙைபை அறிவிப்பவர்கள்.ஆகவே كُنْتَ نَبِيًا وَادم بين الماء والطين ஆதம் அலைஹிஸ்ஸலாம் நீருக்கும், மண்ணுக்குமிடையில் இருந்த போதே –படைக்கப்படும் முன்னரே நான் நபியாக இருந்தேன் என்ற ஹதீதின் படி நாயகம் ஆலமுல் அர்வாஹில் நபியாக இருந்த போதே இல்முல் ஙைப் பெற்றனர்.

எனினும் முக்காலத்தின் ஞானங்களை மிஃராஜில் பெற்றுக் கொண்டதாக ஹதீதுகளில் வந்துள்ளது. ஆனால் இவைகள் எல்லாம் பார்த்து அறிந்து கொண்டவை. பிறகு அவற்றை திருமறையின் விளக்கம் மூலம் தெளிவாக அறிந்துகொண்டனர். எனவே தான் அல்லாஹ் தன் மறையை بَيَانًا لكل شيئ இம்மறை ஒவ்வொரு பொருளையும் விவரிக்கக் கூடியது என்று கூறினான். மிஃராஜில் நடந்ததை... 'எனக்கு ஒவ்வொரு பொருளும் வெளிப்பட்டது. நான் தெரிந்து கொண்டேன்' என்று கூறியுள்ளனர். ஆக மிஃராஜில் பார்த்து தெரிந்ததை மறை மூலம் அதன் விளக்கத்தையும் அறிந்துகொண்டனர்.

கேள்வி:وَعَلَّمَكَ مَالَمْ تَكُنْ تَعْلَمُ என்ற வசனத்திற்கு நபியவர்கள் அறியாத அனைத்தும் என்பதற்கு நீங்கள் தீன், துன்யா, ஆகிறத், நடந்தது, நடக்கப் போவது ஆகிய அனைத்தும் என்று பொருள் கொண்டால் அது அல்லாஹ்வின் இல்முக்கு நிகராகிவிடாதா?

பதில்: நாம் நாயகத்தின் இல்மிலுள்ளதாகக் குறிப்பிடுவது குர்ஆன், ஹதீது அடிப்படையில் அவர்கள் தீன், துன்யா, கியாமத், ஆகிரத் போன்றவற்றின் இல்முகள் முன்னோர், பின்னோர்களின் இல்முகள் அனைத்துப் படைப்புகளையும் விட அதிகமாக இல்முகள் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறினோம்.

அதற்காக இவை மட்டுமே நம் அறிவுக்கு வருவதால் இவை மட்டுமே இல்ம் என்று கூற முடியாது. இல்மின் எல்லை விசாலமானது. எல்லையற்றது. அவற்றை முழுக்க முழுக்க சூழ்ந்தறியக் கூடியவன் ஏக இறைவனான அல்லாஹு ஜல்ல ஷஃனுஹுதஆலா மட்டுமே.

பெருமானாரின் இல்ம் என்பது ஒரு உவமைக்குச் சொன்னால் இறைவனின் இல்முச் சமுத்திரத்தில் ஒரு துளியே. அத்துடன் அதுவும் இறைவனால் வழங்கப்பட்டதே.

وَصَلَّى اللهُ وَسَلَّمَ عَلَى خَيْرِ خَلْقِهِ وَنُوْرِ عَرْشِهِ وَمَظْهَرِ لُطْفِهِ سَيِّدِنَا مُحَمَّدٍ اَعْلَمَ الْعَالَمِيْنَ وَالِهِ وَصَحْبِهِ وَسَلَّمَ اَجْمَعِيْنَ

முற்றும்.